பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ்நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 31 வியாழக்கிழமை (16 08-2001) தொலைபேசி: 3378 ஒலி : 248

★ சமாதான மாயையை ஏற்படுத்த அரசு முயற்சி

# அமைச்சர் ஜெயராஜ் புள்ளேயுடன் புலிகள் பேச்சு நடத்தவில்லை!

## மறுக்கின்றார் அன்ரன் பாலசிங்கம்

(நமது நிருபர்)

மடுத்திருப்பதிக்குச் சென்ற பொதுஜன ஐக்கியமுன்னணியின் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயை தமிழீழ விடுதலைப்புலிகளின் உள்ளூர்த்தலைவர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவில்லையென விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளார். இந்த மறுப்பினை தமிழ்நெற் இணையத் தளத்தின் மூலம் தெரிவித்துள்ளார்.

மடுத்திருப்பதிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே மடுவில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் உள்ளூர் உயர் மட்டத்தலைவர்களைச் சந்தித்துப் பேசியதாக அறிக்கை ஒன்றினை விடுத்திருந்தார்.

அமைச்சரின் இந்த அறிக்கைக்கு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தமிழ்நெற் இணையத்தளத்தின் மூலம் நேற்று மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அந்த மறுப்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

மடுத்திருப்பதிக்குச் சென்ற அமைச்சர்ஜெயராஜ்பெர்ணாண்டோபுள்ளேக்கு யாத்திரிகர் என்ற முறையில் விடுதலைப்புலிகளின் எல்லைப் படைவீரர்கள் ஏனைய யாத்திரிகர்களுக்கு வழங்கியது போன்ற பாதுகாப்பை வழங்கியிருந்தார்கள் இதனை அமைச்சர் தவறாக விளங்கிக் கொண்டுள்ளார்.

பாரிய அரசியல் நெருக்கடிகளைத் தற்பொழுது

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ஈழத்தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதில்லை
### ஜேர்மன் நீதிமன்று முடிவு

(ஜேர்மனி)

ஜேர்மனியில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை தற்போதைக்கு திருப்பி அனுப்புவதில்லை என ஜேர்மன் அரசு தீர்மானித்துள்ளது.

இலங்கையில் தற்போது இடம் பெற்றுவரும்படையினரின் சட்டவிரோதக் கைதுகள், தடுப்புக்காவல்கள், பாலியல், வல்லுறவுச் சம்பவங்கள் மற்றும் எதிரணி அரசியல்கட்சிகள் மீதான ஜனநாயக விரோத நடவடிக்கைகளை அடுத்து ஜேர்மனியின் கால்சூவ நிர்வாக நீதிமன்றம் இலங்கைத்தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதில்லை என்று அறிவித்துள்ளது.

## மிதி வெடியில் காலிழப்பு

(யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் தட்டார் தெருப்பகுதியில்நேற்று இடம் பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் ஒருவர்காலை இழந்தார்.

இலை வெட்டுவதற்காகபற்றைநிறைந்த காணிக்குள சென்ற சமயமே இச்சம்பவம் இடம்பெற்றது.

காக்கை தீவைச் சேர்ந்த சின்னராசா கிஷ்ணபவான்

## மட்டு. செங்கலடியில் 6மீனவர்களைகாணவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி பதுளை வீதியிலுள்ள ரூபன் குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஆறு மீனவர்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமல் போயுள்ளனர் என்று உறவினரால் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட எல்லையில் அமைந்துள்ள மேற்படி ஏரியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது எல்லைப்புற பாதுகாப்பு இராணுவத்தினரால் மீனவர்கள கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர். என்று

→ 8ஆம் பக்கம் பார்க்க

## எதிர்க்கட்சிகள் ஜோன்அமரதுங்காவை சபாநாயகராக்க முடிவு

(கொழும்பு)

உத்தியோகப்பற்றற்ற முறையில் எதிரணியினரால் நாளை கூட்டப்படவுள்ள பாராளுமன்ற அமர்வுக்கு கம்பஹா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்காவை சபாநாயகராகதெரிவு செய்யவுள்ளனர்.

இதற்கான தீர்மானம் நேற்று மாலை கூடிய எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் பிர

→ 8ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர்கள் மீது ஒழுக்காற்றுநடவடிக்கை
### ஜனாதிபதி முடிவு

[கொழும்பு]

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக

குறித்து ஜனாதிபதி நேற்று சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரை அழைத்து ஆராய்ந்

(ஜேர்மனி)

ஜேர்மனியில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை தற்போதைக்கு திருப்பி அனுப்புவதில்லை என ஜேர்மன் அரசு தீர்மானித்துள்ளது.

இலங்கையில் தற்போது இடம் பெற்றுவரும்படையினரின் சட்டவிரோதக் கைதுகள், தடுப்புக்காவல்கள், பாலியல், வல்லுறவுச் சம்பவங்கள் மற்றும் எதிரணி அரசியல்கட்சிகள் மீதான ஜனநாயக விரோத நடவடிக்கைகளை அடுத்து ஜேர்மனியின் கால்சூவ நிர்வாக நீதிமன்றம் இலங்கைத்தமிழ்அகதிகளைத் திருப்பி அனுப்புவதில்லை என்று அறிவித்துள்ளது.

→ 8ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணம் தட்டார் தெருப்பகுதியில்நேற்று இடம் பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் ஒருவர்காலை இழந்தார்

இலை வெட்டுவதற்காகபற்றைநிறைந்த காணிக்குள் சென்ற சமயமே இச்சம்பவம் இடம்பெற்றது.

காக்கை தீவைச் சேர்ந்த சின்னராசா கிஷ்ணபவான்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# புலிகளின் தலைவர் பிரபா தனது இலட்சியத்திலிருந்து விலகமாட்டார்!

## முன்னாள் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே பிரபாகரன் தனது இலட்சியத்தை ஒருபோதும் தளர்த்திக்கொளளப்போவதில்லை யென்று முன்னாள் புலனாய்வுப் பிரிவு பிரதி பொலிஸ்மா அதிபர் மெரில்குணத்ரன தெரிவித்துள்ளார.

ஒருதீவின் இரண்டும் கெட்டநிலை எனும் தனதுநூலை வெளியிட்டு வைத்து மெரில் குணரத்னஉரையாற்றினார்: அவ் உரையிலேயேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர் இலட்சியத்தில் உறுதியானவர். அவர் ஒருபோதும் தனது இலட்சியத்தில் இருந்து தளர மாட்டார்.

இன்றைய அரசியல் நிலமை இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான இறுதிச்சந்தர்ப்பமாகக் கூட இருக்கலா.ம்

1980களில் இலங்கைஇந்தியத்தலைவர்கள் இனப்பிரச்சினையின் தார்பரியத்தைத றாகவேஎடைபோட்டனரென்று மெரில்குணரத்ன மேலுங்கூறினார். இதேவேளை மெரில்குணரத்ன 1980களிலேயேபுலனாய்வுப்பிரிவு பிரதிப்பொலிஸ்மாஅதிபராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## யப்பானிய ஆலோசகர் ஜே. வி. பியுடன் சந்திப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியின் அரசியற் பிரமுகர்களை இலங்கைக்கான யப்பானிய தூதரக பிரதம அரசியல்ஆலோசகர் நேற்று முன்தினம் சந்தித்து இலங்கையின் இன்றையஅரசியல்நிலைவரம் மற்றும் ஜே:வி பியினரின் நிலைப்பாடு குறித்து விரிவாக பேசியுள்ளார்,

நுகேகொடையில் அமைந்துள்ள ஜே.வி.பி கட்சியின் அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது:

இச்சந்திப்பில் கட்சியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் பிரசாரச் செயலாளரும் எம்:பியுமான விமல்வீரவன்ச ஆகியோர்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## பளைப் பகுதியில் கிபிர் குண்டு வீச்சு

பளைப் பகுதியில் நேற்று ஸ்ரீலங்காவிமானங்கள்குண்டு வீச்சுத் தாக்குதல்களைநடத்தியுள்ளன.

புலிகளின்நிலைகள் மற்றும் பதுங்குகுழிகள் மீது தாக்குதல்கள் நடத்தப் பட்டதாக விமானப்படை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது(ந.8)

# அமைச்சர்கள் மீது ஒழுக்காற்றுநடவடிக்கை

## ஜனாதிபதி முடிவு

[கொழும்பு]

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக செயற்பட்டு வரும் சில அமைச்சர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆராய்ந்துவருகின்றார்.

கட்சியின் உட்பூசல்கள் குறித்து ஜனாதிபதி நேற்று சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரை அழைத்து ஆராய்ந்தார்.

இந்நிலையில் பகிரங்கமாக அரசுக்கு எதிராகக் கருத்து வெளியிடுவதுடல் தன்னையும் தேவையற்றுச் சீண்டும் அமைச்சர்களான எஸ்.பி

→ 8ஆம் பக்கம் பார்க்க

# மடுமாதா உற்சவத்தில் ஓர் இலட்சம் பக்தர்கள்

(மடு)

இம்முறை இடம் பெற்ற மடுமாதா உற்சவத்திற்குச் சுமார் ஒருலட்சம் பக்தர்கள் திரண்டிருந்தார்கள் என்று மடுச்செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக்காலை 6 மணிக்கு இடம்பெற்ற திருப்பலி பூசையுடன் மடுமாதா உற்சவம் நிறைவுபெற்றுள்ளது:

திருப்பலி பூசையை மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவண இராயப்பு யோசப் தமிழில் நடத்திவைத்தார்.

நாட்டில் சமாதானமும்சாந்தியும்நிலவ வேண்டும்என்றும் அதற்காகப் பலரும் பாடுபட வேண்டும் என்றும் மன்னார்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மடு யாத்திரிகர்களுடன் கலைஞர்கள் சந்திப்பு

(வவுனியா,

மடுவுக்கு தல யாத்திரை சென்ற தென்பகுதி சிங்கள மக்களை, வன்னியில் உள்ள தெருவெளி நாடகக்கலைஞர் சந்தித்து மனம் திறந்து பேசியுள்ளனர்.

தமிழர்விடுதலைப்போராட்டத்தின் நியாயப்பாடுகளை நாடகக் கலைஞர்கள் சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்தியதுடன்,சிங்களஅரசு தமிழ் மக்ளுக்கு ஏற்படுத்தும் கொடுமைகள், வஞ்சனைகள் பற்றியும்விடுதலைபபோராட்டம் பற்றி சிங்கள மக்களுக்கிருந்த தப்பபிப்பிராயம் நீங்கும் வகையிலும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

(8ம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

தாமர் ஒழுங்கை, புலோலி வடக்கு எனும் முகவரியைச் சேர்ந்த நவரத்தினம் றமணன் என்பவருடைய விசேட அடையாள அட்டை கோப்பாய்ப் பகுதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (3475)

### தேவை

யாழ். நகரில் உள்ள தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றிற்கு பெண் ஒருவர் தேவை (ஆங்கிலம் தெரிந்தவர் விரும்பத்தக்கது) முழு விபரங்களுடனும் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல-125, மே/பா, வலம்புரி, யாழ்ப்பாணம். (C-2397)


## வேகமாக பரவும் நோய்கள்

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் செங்கண்மாரி, காய்ச்சல் போன்ற நோய்கள் பரவி வருவதாகவைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் கடந்த மூன்று தினங்களில் 4 பேர்செங்கண்மாரி நோயினாலும்10பேர்காய்ச்சலினாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் மூலம் அறியப்பட்டுள்ளது.

பொது இடங்களில் உணவுப் பரிமாற்றம், மற்றும் சுகாதாரமற்ற செயற்பாடுகளினாலேயேஇவ்வாறுநோய்கள் பரவுவதாகத் தெரிய வருகிறது. (க-23)


பருத்தித்துறை
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
பருத்தித்துறை

## பாராட்டி நன்றி கூறி வாழ்த்துகின்றோம்

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை சங்கப்பணிமனை கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு ரூபா நாற்பது இலட்சம் செய்ததில் முதல் கட்டமாக ரூபா இருபது இலட்சம் உடன் தந்து வழங்கியமைக்காக

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகார இந்து சமய கலாசார அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய

மாண்புமிகு அமைச்சர்
திரு
**K. N. டக்ளஸ் தேவானந்தா**
அவர்கட்கும்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் பிரதம அமைப்பாளருமான

**திரு. கா. வே. குகேந்திரன் (ஜெகன்)**
அவர்கட்கும்

எமது சங்கத்தின் நீண்டகாலத் தேவையை உணர்ந்து புதிய பணிமனை அமைப்பதற்கு அமைச்சரிடம் எடுத்துக்கூறி நிதி ஒதுக்கீடு செய்வதற்கு ஒத்தாசை புரிந்த பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவரும், வடமராட்சி ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் அமைப்பாளருமான

**உயர்திரு ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் அவர்கட்கும்**

எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்களும்
பணியாளர்களும்

பருத்தித்துறை பல நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை. (சி-2395)



## UNIVERSITY OF JAFFNA SRI LANKA

## Vacancies

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 28-09-2001 for the undermentioned post.

1. Assistant Network Manager Grade II
2. Instructor in Computer Technology Grade II

Salary Code and Salary Scale.
BS–02–Rs. 10,800–3x300–11,700 (EB)
12,900–13x375–17,775 p.m

Note: Allowances will also be paid as approved by the University Grants Commission.

Appointees will become contributors to the University's Provident Fund, contributing 10% of their earnings and the University contributing an amount equivalent to 7% of their monthly earnings. In addition they will become contributors to the Employees Trust Fund and the University Pension Scheme under which the University will contribute an amount equivalent to 3% and 8% of the monthly earnings of the employee respectively.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments, University of Jaffna, Sri Lanka either in person or by sending a Money Order for Rs. 20/– per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self–addressed stamped envelope 23x10cm in size.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

Registrar
University of Jaffna,
Sri Lanka.
15 th August 2001

(C/2396)



தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்

## நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் 'ரிதிரேகா' கருமபீடம்

ரிதிரேகா அதிர்ஷ்டசாலிகள் கூடுதலாக யாழ். குடாநாட்டு மக்களாகவே இருக்கவேண்டும் என்னும் நல்ல நோக்குடன் யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கி நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் மேற்கு வீதியில் இந்து விடுதிக்கு முன்பாக ரிதிரேகா கருமபீடம் அமைத்து தினமும் காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை இயங்குகின்றது.

இதுவரை நீங்கள் ரிதிரேகா சான்றிதழ்களைக் கொள்வனவு செய்யவில்லையென்றால் சீட்டிழுப்பில் பங்குபெறத் தவறியவர்களாவீர்கள். ஏன் தயக்கம்? 100/- ரூபாவுடையும் நீங்கள் அதிர்ஷ்டசாலிகளாகலாம்;

# 'ரிதிரேகா' கருமபீடம்

ரிதிரேகா அதிர்ஷ்டசாலிகள் கூடுதலாக யாழ். குடாநாட்டு மக்களாகவே இருக்கவேண்டும் என்னும் நல்ல நோக்குடன் யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கி நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் மேற்கு வீதியில் இந்து விடுதிக்கு முன்பாக ரிதிரேகா கருமபீடம் அமைத்து தினமும் காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை இயங்குகின்றது.

இதுவரை நீங்கள் ரிதிரேகா சான்றிதழ்களைக் கொள்வனவு செய்யவில்லையென்றால் சீட்டிழுப்பில் பங்குபெறத் தவறியவர்களாவீர்கள். ஏன் தயக்கம்? 100/ ரூபாவுடனும் நீங்கள் அதிர்ஷ்டசாலிகளாகலாம். இதில் வைப்புச்செய்யும் பணத்தைத் திரும்பப் பெறலாம் என்பதால் ஒருபோதும் உங்களுக்குத் தோல்வியில்லை.

10/- ரூபாவுக்கு ஒரு இலக்கம் என்ற அடிப்படையில் சீட்டிழுப்பு நடைபெறுவதால் கூடிய தொகையை முதலீடு செய்து அதிர்ஷ்டம் தங்களை அணுகும் வாய்ப்பை அதிகரிக்கலாம். எனவே இன்றே ரிதிரேகா சான்றிதழ்களைக் கொள்வனவு செய்து அதிர்ஷ்டசாலிகளாகுங்கள்.

**சான்றிதழ்களின் பெறுமதி; 100/-, 250/-, 500/-, 1000/-, 5000/-**

## ரிதிரேகா பரிசு விபரம்:-

இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும் சீட்டிழுப்புகளில்

1ஆம் பரிசு : 15 இலட்சம் பெறுமதியான புத்தம்புதிய நிஸான் சனி சுப்பர் சலூன் 1.6 கார்

2ஆம் பரிசு ; 08 இலட்சம் பெறுமதியான புத்தம்புதிய சுஸுக்கி ஒல்டோ கார்

3ஆம் பரிசு : 02 இலட்சம் பெறுமதியான மோட்டார் சைக்கிள் அல்லது ஒட்டோ அல்லது கை உழவு இயந்திரம

4ஆம் பரிசு : 50 பேருக்கு தலா 5,000/-

5ஆம் பரிசு : 100 பேருக்கு தலா 2,000/-

6ஆம் பரிசு : 3050 பேருக்கு தலா 1,000/-

**வருடத்தில் ஒருமுறை நடைபெறும் சுப்பர் சீட்டிழுப்பில் முதலாம் பரிசு 35 லட்சம் பெறுமதியான புத்தம் புதிய BMW கார்.**

உங்கள் எதிர்காலம் சுபீட்சமாக அமைவதற்கு ரிதிரேகா ஒரு வழிகாட்டி.

தேசிய சேமிப்பு வங்கி உங்கள் குடும்ப வங்கி

NSB

உங்கள் குடும்ப வங்கி

"உங்கள் குடும்ப வங்கி"

"Your Family Bank"

(C 2398)

# தமிழில் கடமையாற்றத் தவறும்

# அரச அதிகாரிகள் மீது நடவடிக்கை

## அமைச்சர் அதாவுட தெரிவிப்பு

(சொழும்பு

தமிழ் மொழியில் கடமை யாற்றத் தவறும் தமிழ் அரச அதிகாரிகள் குறித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இன விவகார தேசிய ஒருமைப்பாடு கனிப்பொருள் போருட்டு அரச அலுவல்கள் மூலவள அமைச்சர் அதாவுத செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் மக்கள் இலகுவில் தமது அலுவல்களை நிறைவேற்றிக் கொள்ளும் வில் தமிழ் பேசும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமிழ்மொழியில் கடமையாற்றத் தவறுவது அரசாங்கத்தினதும், மக்களினதும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இடையூறாகும்.

அரச அலுவலகங்களில் தமிழ்மொழியில் கருமங்களை ஆற்றுவதை இலகுபடுத்தும் பொருட்டு தமிழ்த் தட்டெழுத்தாளர்களும் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வசதிகளிலிருந்தும் கடமையாற்றத் தவறுவது அநீதியானது. இது சம்பந்தமாக ஆராய்ந்து நடவடிக்கைஎடுக்கப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(உ)

### தென்மராட்சிப் பாடசாலை

# அதிபர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலய தரம் 2,3ஐச் சேர்ந்த 9 பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

தரம் 2 ஐச் சேர்ந்த கொடிகாமம் அ.த.க. பாடசாலை, மிருசுவில் அ. த. க. பாடசாலை, அல்லாரை அ.த.க. பாடசாலை சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம், மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலயம், நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை,

தரம் 3 ஐச் சேர்ந்த சரசாலை சரஸ்வதி வித்தியாலயம், மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலயம், மூகமாலை அ.த.க பாடசாலை ஆகியவற்றில் நிலவும் அதிபர் வெற்றிடங்களே நிரப்பப்படவுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் வலயத் திணைக்களத்தினால் தயாரிக்கப் பட்ட விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து கோட்டக் கல்வி அலுவலகங்கள் ஊடாகஎதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பாக சம்பந்தப்பட்ட வலயப்பணிமனைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (உ-23)

### விமான நிலையப் பாதுகாப்பை

# மதிப்பீடு செய்ய சர்வதேச நிபுணர்கள்குழு வருகை

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கென மூவரடங்கிய சர்வதேச நிபுணர்கள் குழு கொழும்பு வந்துள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த சர்வதேச சிவில் விமானசேவை அணியானது விடுதலைப் புலிகளின் தாக்குதலின்பின்னர் இலங்கை அதிகாரிகள் எடுத்துள்ள நடவடிக்கைகளை மதிப்பீடு செய்யும்.

இவர்கள் தமது அறிக்கையை சிவில் விமானப்போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிப்பர். சர்வதேச சிவில் விமானசேவை அமைப்பு விமான நிலையங்களில் சர்வதேசதரம் பேணப்படுகிறதா என்பதை மேற்பார்வை செய்வதற்கு அதிகாரமுள்ள அமைப்பாகும்.

(உ)

### ஜனநாயகத்திற்கான

# மக்கள் இயக்கத்தின் முயற்சி வெற்றி

(கொழும்பு)

ஜனநாயகத்திற்கான மக்கள் இயக்கம் 14 மாவட்டங்களில் நடத்திய 72 கூட்டங்களும் பெரும் வெற்றியளித்

மாபெரும் கூட்டம் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

ஜூலை 19 அம்கிருகி நடந்த

# நல்லைக் கந்தன் சந்நிதியில் இன்று

[யாழ்ப்பாணம்]

நல்லூர் முருகன் ஆலயஉற்சவத்தை யொட்டி இளங்கலைஞர் மன்றத்தினரால் தினமும்மாலை 6.00மணி தொடக்கம் 7 15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கில் இன்று, ஆர். இராதாகிருஷ்ணனின் பாட்டுக் கச்சேரி இடம் பெறவுள்ளது.

★ ★ ★

நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி முத்துவிநாயகர் ஆலயத்தில் தினமும் மாலை 5–15 மணிக்கு இடம்பெற்று வரும் கம்பராமாயண சொற்பொழிவில் இன்று, 'கண்டனன் சீதையை' என்ற தலைப்பில் சிவ. வை. நித்தியானந்த சர்மா சொற்பொழிவாற்றுவார்.

★ ★ ★

நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு ஆலய முன்றலில் அமைந்துள்ள ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலயத்தில் தினமும் மாலை இடம் பெற்றுவரும் 'புராண இதிகாசமுத்துக்கள்' என்னும் பேச்சுத் தொடரில் இன்று, 'சூரபன்மன் கந்தனின வாகனமாதல்' என்ற தலைப்பில் காரை கு. சிவராஜசர்மா சொற்பொழிவாற்றுவார்,

## நல்லூரான் திருவடிக்கு-23



### நின்னருள் காண்பமின்று

தண்ணொளி வீசும் தயமித வதனமாறும்
தனிநெடு வேலைப் பற்றும்
திண்ணிய கரங்கள் யாவும், தூய்மையின்
பொலிவுறு மெய்யினோடும
நுண்ணிய நோக்கும் அருள் பொழிகண்களோடும்
பிறைநுதற் பெண்களோடும
புண்ணிய மீயும் நல்லூர்ப் பெருமகனீயுமிங்கு
நம்மிடர் மாய்ந்தே போக
நண்ணுதி சப்பரத்தை நலமிகு மாலை நாமும்
நின்னருள் காண்பமன்றே!

ஜெ. பிரேம்குமார்
(கல்வயல்)

### கிளரட்டும் மகிழ்வெமக்கு

பட்ட துயர் போதும்
படமுடியா தினித் துயரம்
சுட்ட சட்டி விட்டது போல்
யுத்தமது ஓயட்டும்
முட்ட முட்டப் பஞ்சமே
ஆனாலும் நல்லூர் வேலா
எட்டப்பர் ஒழியட்டும்
எம்வாழ்வு மலரட்டும்
ட்ட வருகுது
சுதந்திர மென்றார்ப்பரிக்க
முட்டறுக்கும் முருகா
முத்தமிழின் வேலெமக்கு
கிட்டவரட்டும்
கிளரட்டும் மகிழ் வெமக்கு
சுட்டெரிக்கப் பகையதனை
சுழற்றிவிடு அயிலதனை

கோ. சி. வேலாயுதம்

### நேச முறுங் காட்சியது காண்

சப்பரத்தி லேறிவருஞ் சண்முகனை நல்லூரில்
எப்பொழுதும் காண இயலாது - தப்பாது
பாசங் குறுகப் பரம்பொருளோ டான்மாவும்
நேசமுறுங் காட்சியது காண்

சி. இராசரத்தினம்

### அருளுடன் வாழ்ந்திடுவோம்

தங்கிடும் துயர்கள் தீர்ந்திட வேண்டி
பொங்கிடும் இன்பப் பொய்கையில் நீந்திட
சுந்தரத் தமிழினில் அவன் துதியினைப் பாடி
சிங்கார வேலவன் அருளுடன் வாழ்ந்திடுவோம்

மு. முத்துக்குமார்

## ஜனநாயகத்திற்கான

# மக்கள் இயக்கத்தின் முயற்சி வெற்றி

(கொழும்பு)

ஜனநாயகத்திற்கான மக்கள் இயக்கம் 14 மாவட்டங்களில் நடத்திய 72 கூட்டங்களும் பெரும் வெற்றியளித்துள்ளதாக டாக்டர் கருணாசேனா கொடித்துவக்கு தெரிவித்தார்:

ஒரு இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஏதுவாக அரசாங்கம் இராஜிநாமா செய்ய வேண்டும என்ற கோரிக்கைக்கு கிடைத்தவெற்றி அது எனவும் குறிப்பிட்ட அவர், ஓகஸ்ட் 23 ஆம் திகதி கொழும்பில் மாபெரும் கூட்டம் நடைபெறும் என்றும் தெரிவித்தார்:

ஜூலை 19 ஆம்திகதி நடந்த கூட்டத்தை விட பெரியதாக அமையும்என்றும் இது பற்றியமேலதிக விபரங்கள் இன்றுஎம் பிக்களின் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார். ஓகஸ்ட் 17ஆம் திகதி கூட்டு எதிர்க்கட்சிகளின் 115 எம். பி. க்கள் பாராளுமன்றத்தில் கூடி தீர்மானம் நிறைவேற்ற விருப்பது குறிப்பிடத்தக்சது: (உ)

# வெள்ளிக்கிழமைகளில் விடுமுறை வழங்கவும்

## கல்வி நிலையங்களுக்கு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தனியார் கல்வி நிலையங்கள் மாணவரின் நன்மைகருதி வெள்ளிக்கிழமைகளில் விடுமுறை வழங்க வேண்டும்என்ற கோரிக்கை சைவ அபிமானிகள் பலராலும் விடுக்கப்பட்டு வருகிறது.

வாரத்தில் ஏழுநாட்களும் தனியார் கல்வி நிலையங்கள் வகுப்புகள் நடத்து வதால் மாணவர்கள் சமய, மற்றும் பொதுவிடயங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் குறைவாகக் காணப்படுகிறது

ஒழுக்கம், மனித விழுமியங்கள், அறவாழ்வுபற்றிய சிந்தனை அற்ற மாணவ பரம்பரை ஒன்று உருவாகுவதற்கு இச் செயல்முறை வழிகோலும் என்றும் தெரிவிக்கப்படுகிறது

பல பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பகுதிகளில் வெள்ளிக்கிழமைகளில் தனியார் கல்விநிலையங்களைமூடி விடுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது:

இதுவிடயத்தில் சகலரும் எதிர்கால மாணவ சமுதாயத்தின் பக்தி பூர்வமான வாழ்வை கருத்தில்கொண்டு செயற்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு ஆலய முன்றலில் அமைந்துள்ள ஸ்ரீ மனோன் மணி அம்மன் ஆலயத்தில் தினமும் மாலை இடம் பெற்றுவரும்' புராண இதிகாசமுத்துக்கள்' என்னும் பேச்சுத் தொடரில் இன்று, 'சூரபன்மன் கந்தனின் வாகனமாதல்' என்ற தலைப்பில் காரை கு. சிவராஜசர் மா சொற்பொழிவாற்றுவார்,

★ ★ ★

நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் தினமும் பி.ப.2.00 மணிக்கு இடம் பெற்று வரும் சமய சொற்பொழிவில் இன்று சங்கீதரத்தினம் இ ஸ்ரீ ரங்க நாயகியின் பண்ணிசையைத் தொடர்ந்து, ''சைவத்தின் சிறப்பு' என்ற தலைப்பில் புலவர் மு. திருநாவுக்கரசு சொற்பொழிவாற்றுவார். (செ)

# மதில் இடிந்ததில் காயம்

(மந்திகை)

மதிலில் ஏறிய சிறுவனைப் பார்த்துக் கொண்டிருந்தவர், மதில் இடிந்து விழுந்ததில் காயமடைந்தார். சிறுவன் காயம் எதுவுமின்றி தப்பினான்.

வல்வெட்டித்துறையில் அண்மையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த ஆர்: சிவரூபன் என்பவர் காய முற்ற நிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-23)

சி. இராசரத்தினம்

---

## அருளுடன் வாழ்ந்திடுவோம்

தங்கிடும் துயர்கள் தீர்ந்திட வேண்டி
பொங்கிடும் இன்பப் பொய்கையில் நீந்திட
சுந்தரத் தமிழினில் அவன் துதியினைப் பாடி
சிங்கார வேலவன் அருளுடன் வாழ்ந்திடுவோம்

மு. முத்துக்குமார்

---

## ஏதிலிகள் நீள் நிழலே

கோடி உடுத் தொகுதி கோலமயில் தோகை ஒளி
வாடி அழுபவர்க்கு வந்தருளும் அபய கரம்
ஈடில்லா ஏழிசையே எவ்வுயிர்க்கும் தோற்றமதே
ஏடே திருப்புகழே ஏதிலிகள் நீள்நிழலே
காவே கருப்பே கற்கண்டே நல்லூரான்
ஆடும் புவித் தொகுதி அண்ட பிரபஞ்ச மெல்லாம்
சூடுந்தோளழகன் துணைவேண்டிக்கைதொழுதேன்

கு. துரைராஜன்
கல்வியங்காடு

---

## எமக்குள் தோன்றுதையா

நல்லை மா நகரினிலே நாதனவன் வருகின்றான்
தொல்லை யெல்லாம் தீருதையா துயரங்கள்
மறையுதையா
எல்லையில்லா ஆனந்தம் எமக்குள்ளே தோன்று
தையா
இல்லை ஐயா துயரமென ஒலிப்பது அவன்
குரலையா

ஓவியகேசரி வரதர்

---

## நிம்மதியை சேர்த்துவிரு

ஓமெனவே ஒவ்வோர் நாளுனையே
ஓயாமல் நினைத்திடும் எம்உளங்கள்
ஆமெனவே வந்திடையா வேலுடனே
ஆனந்தக் கூத்தாடும் நல்லூரா
தாவெனவே கேட்கின்றோம் நிம்மதியே
தரணிதனை ஆளுகின்ற பேரழகா
தேவர்குலம் காத்தருள் எம்முருகா
தேனருளை சொரிந்திடப்பா நல்லூரா

இ. விஜயகுமன்

### மறைந்தார் மாண்பு

# வையத்துள் வாழ்வாங்குவாழும் வகைதெரிந்த

# மயிலணி கார்த்திகேய குகதாச சர்மா

கோப்பாய் நாவலர்பாடசாலைத் தலைமை உபாத்தியாயராகக் கடமையாற்றிய சு. கார்த்திகேய ஐயருடைய மகனாக நீர்வையூரிற் பிறந்தவர் அமரர் குகதாச சர்மா. அன்னார் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிற் கல்வி பயின்று கல்வியிற் திறமைமிக்கவராகச் சிரேஷ்ட தராதரப்பரீட்சையிற் சித்தி பெற்று இளம் வயதிலேயே அரச கட்டடத்திணைக்களத்தில் கடமை ஏற்றார்.

அவர் உரிய பராயத்திலே தெல்லிப்பழைமகாஜனாக்கல்லூரியில் உதவி அதிபராகப் பணிபுரிந்த மதிப்புக்குரிய மயிலணிகார்த்திகேய ஐயரின் ஏகபுத்திரியைத் தம் வாழ்க்கைத் துணையாகக் கொண்டார்.

### அரச பதவி

அரச கட்டடத்திணைக்களத்திலே படிப்படியான உயர்ச்சிகளைப் பெற்றுக் கட்டட மேற்பார்வையாளராகவும், பரிசோதகராகவும் இலங்கையின் பலபாகங்களிலும் பணிபுரிந்து பலருடைய அன்பிற்கும் மதிப்பிற்கும் பாத்திரமாக விளங்கினார்.

அமரர் பல சமய, சமூகப் பணிகளிலும் ஈடுபாடுடையவராகத் தாம் பிறந்த ஊரிலும், புகுந்த ஊரான சுன்னாகம் மயிலணியிலும் மக்கள் மனதில் இடங்கொண்டவராக வாழ்ந்தார். அரச பதவியிலிருந்து இளைப்பாறியதும், இளவயதிற் தாம் கற்ற வடமொழி ஆற்றலாலும், ஆலயப் பணிபுரியும் ஆர்வத்தினாலும் நீர்வேலி மா சிவன் மீனாட்சி அம்பாள் ஆலய அர்ச்சகராகப் பணிபுரியும் வாய்ப்பினைப் பெற்றார்.

### அம்மன் ஆலயம்

சிறு ஆலயமாக இருந்த அம்பிகையின் திருக் கோவில்

## நீர்வை மணி

இவருடைய நித்திய நைமித்தியச் சிறப்புக்களினால் இன்று அழகு மிக்கதொரு சிறந்த அமைப்புடைய ஆலயமாகக் காட்சியளிக்கின்றது. இந்த ஆலயத்தின் காப்பாளராகவும், ஆலோசகராகவும் தம் இறுதிக்காலம் வரை இருந்த பெருமைக்குரியவராக அமரர் ஐயா விளங்கினார்.

1930 ஆம் ஆண்டு பிறந்த ஐயா தனது எழுபத்தோராவது வயதில் இறைபதம் அடைந்தார். வாழ்நாளில் அன்பும், பண்பும், அடக்கமும், சிறந்த ஆற்றலும் உடையவராகப் பலருக்கும் நல்ல ஆலோசகராக விளங்கிய அமரர் பிரிவு ஈடுசெய்ப முடியாததாகும்.

பிறந்த ஊரிலும், புகுந்த ஊரிலும் தனித்துவமான தமது நற்பண்புகளால் ‘வையத்துள் வாழ்வாங்கு வாழும் வகைதனை’ ஏனையோர்க்கு எடுத்துக்காட்டாக அமரர் கார்த்திகேய குகதாச சர்மா ஐயா விட்டுச் சென்றமை நோக்கற்பாலதாகும்.

‘குடம்பைதனித் தொழியப் புட்பறந்தற்றே
உடம்பொடுயிரிடை நட்பு’

□

## ஆசிரியருக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

‘‘சனத்தொகையும் குடும்பக் கல்வியு’’ என்ற தலைப்பில் ஆசிரியருக்கான செயலமர்வு எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 00 மணி முதல் பிற்பகல் 5.00 மணி வரை யாழ். கல்வித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ். கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (க)

## படையினர் அனுமதி

(மந்திகை)

நுணாவில் பகுதியில் இருந்து நல்லூருக்குநேர்த்திக்காக பக்தர்கள் காவடி, கரகம் என்பன எடுப்பதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

தென்மராட்சி இடப்பெயர்வின் பின்னர் கடந்த வருடம் மேற்படி நேர்த்திக் கடன்களைச் செலுத்தப் படையினர் அனுமதி மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

# கட்டுப்பாட்டை மீறின் கடும் நடவடிக்கை

## ஐ. தே. க. எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டையும் அதன் நிலைப்பாட்டையும் மீறி அறிக்கைகள் விடும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக கட்சி கடும் நடவடிக்கை எடுக்குமென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் செனரத்ஹப்பு கொட்டுவ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் முதற்பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவின் பேரன் ருக்மன் சேனநாயக்கா தலைமையில் 24 ஐ. தே. க எம்பிக்களும், மினிந்த மௌகொட தலைமையில், 20 எம்பிகளும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்க முன்வந்திருப்பதை அடுத்தே ஐக்கியதேசியக் கட்சியின் செயலாளர் செனரத் ஹப்பு கொட்டுவ மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளதுடன்,

அரசு எப்போது தேர்தல் நடத்தினாலும் அத்தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி முகங்கொடுக்கத் தயாராக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார் (வ)

# யாழிலிருந்து கொழும்பிற்கு ஏழுபேரின் வழக்குகள்

## மேலதிக விசாரணைக்காம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு இளம்பெண்கள் உட்பட 7 பேரின் வழக்குகள் வவுனியா மற்றும் கொழும்பு மேல் நீதி மன்றங்களுக்கு மாற்றப்பட்டதையடுத்து சம் என் ஜேசுதாஸ், கே. தயாகரன், எஸ். விஜயரூபன், கே. ஜெயகலா, ரி. யோகரதி ஆகிய ஐவரினதும் வழக்கு விசாரணைகள் யாழ். நீதிமன்றத்தில் இருந்து வவுனியா நீதிமன்றத்திற்கும் வழக்கு விசாரணைகள் மாற்றப்பட்டுள்ளன.

மேற்படி கைதிகள் யாழ்

## இராசிபலன்

16-8-2001
(ஆடி 31, வியாழன்)
துவாதசி பி ப 4 02 வரை
திருவாதிரை மு.ப 10.18 வரை
இராகுகாலம் 1 35- 3.05
நல்லநேரம் 7 35- 9 05
பிரதோச விரதம்.

**மேடம்**
தனவரவு, முயற்சிவெற்றி, நல்ல சம்பவம், வாக்கு மேன்மை.

**இடபம்**
பெண்களால் உதவி, காரியம் கைகூடும். வீண்வாக்குவாதம், பொருள் விரயம்.

**மிதுனம்**
ஜனவசியம், சயனசுகம், நல்ல முயற்சி, கௌரவம்.

**கடகம்**
பிரயாணம், சுகலாபம், வீண் மனஸ்தாபம், காரிய தாமதம்.

**சிங்கம்**
வரவேற்பு, நல்ல காரியம், குடும்ப சுகம், தொழில் சிந்தை.

**கன்னி**
தொழில் வெற்றி, மேன்மை, சுபநிகழ்வு, முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்**
கட்டுப்பாடு, அன்றோர்

# ஈ. பி. ஆர். எல். எவ்விற்கு நீதிவான் எச்சரிக்கை

(வவுனியா)

நீதிமன்றத்தை அவமதிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என ஈ பி ஆர். எல். எவ். வரதர் அணியைச் சேர்ந்தவர்களுக்கு வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வாரம் வவுனியாவில் ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ் (வரதர் அணி) என்பவற்றுக்கிடையில் இடம்பெற்ற மோதல் தொடர்பான விசாரணை கடந்த திங்கள் காலை வவுனியா மாவட்டநீதிவான் எம் இளஞ்செழியன் முன்னிலையில இடம்பெற்றபோது ரெலோவைச் சேர்ந்த ஆறுபேர் மன்றில் சமுகமளித்திருந்தனர்.

ஆனால் வரதர் அணியைச் சேர்ந்தவர்கள் நீதிமன்றத்திற்கு சமுகங்கொடுக்கவில்லை. இதன் காரணமாக நீதிவான் பிடியாணை பிறப்பித்தார். இதனை அடுத்து மாலை வரதர் அணியைச் சேர்ந்த இருவர் சட்டத்தரணியினூடு ஆஜரான போது விசாரணைகளுக்கு ஒழுங்காக சமுகமளிக்கவேண்டும். தவறும்பட்சத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் நீதிமன்றை அவமதிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாமெனவும் எச்சரிக்கை செய்த நீதிவான் அவர்களை ஐயாயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்தார். (ந- 8)

# கல்வயலில் மீளக்குடியமர்வு இடை நிறுத்தம்

## படைத் தரப்பு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் இம் மாதம் 10 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் ஜே/305-கல்வயல் கிராம கண்ணிவெடிகள் போன்றவற்றை முழுமையாக அப்புறப்படுத்தி பாதுகாப்பான பகுதி என பூரணமாக உறுதி செய்த பின்பு மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேலதிக விசாரணைக்காம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு இளம்பெண்கள் உட்பட 7 பேரின் வழக்குகள் வவுனியா மற்றும் கொழும்பு மேல் நீதி மன்றங்களுக்கு மாற்றப்பட்டதையடுத்து சம்பந்தப்பட்டவர்கள் நேற்றைய தினம் கப்பல் மூலம் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

ரி. இராசகுமார், எஸ் கிருஷ்ணகுமார் ஆகிய இருவரினதும் வழக்கு விசாரணைகள் பருத்தித்துறை நீதி மன்றத்தில் இருந்து கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கும், என் ஜேசுதாஸ், கே. தயாகரன், எஸ். விஜயரூபன், கே. ஜெயகலா, ரி. யோகரதி ஆகிய ஐவரினதும் வழக்கு விசாரணைகள் யாழ். நீதிமன்றத்தில் இருந்து வவுனியா நீதிமன்றத்திற்கும் வழக்கு விசாரணைகள் மாற்றப்பட்டுள்ளன.

மேற்படி கைதிகள் யாழ் சிறைச்சாலை அதிகாரி ஒருவருடனும் மற்றும் உத்தியோகத்தர்களுடனும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணையின் பொருட்டே இவ் வழக்குகள் மேற்படி நீதிமன்றங்களிற்கு மாற்றப்படவுள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-2-6)

# கசிப்புத் தயாரித்தவர் வீடு தீயிட்டுக் கொளுத்தப்பட்டது

## உரும்பிராயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கசிப்பு தயாரித்தவரின் வீட்டைத் தீயிட்டுக்கொளுத்திய சம்பவம் அண்மையில் உரும்பிராய்ப் பகுதியில் நடைபெற்றுள்ளது

இச்சம்பவ பற்றித் தெரிய வருவதாவது; கசிப்பு தயாரிப்பவர் ஒருவரது வீட்டில்திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்ட மதுவரி பரிசோதகர்கள் பெருமளவு கசிப்பைக் கைப்பற்றினர்.

கசிப்பு பறி முதல் செய்யப்பட்டதால் ஆத்திரமடைந்த கசிப்புத் தயாரிப்பாளர் தனது வீட்டில் கசிப்பு தயாரிப்பதை, மதுவரிப் பரிசோதகர்களுக்கு காட்டிக் கொடுத்தவர் என்ற சந்தேகம் காரணமாக அவ்வூர் பொது அமைப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் கத்தியால் வெட்டியுள்ளார்

காரணம் ஏதுமின்றி தமது உறுப்பினரைக் கத்தியால் வெட்டியதால் ஆத்திரமடைந்த பொதுஅமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள், அந்தக் கசிப்புப்பேர்வழியின், வீட்டைத் தீயிட்டுக்கொளுத்தினார்கள்.

கத்தியால் வெட்டப்பட்ட இளைஞன் எஸ். சிவகுமார் (வயது21) கோப்பாய் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

தாமதம்.

**சிங்கம்**

வரவேற்பு, நல்ல காரியம், குடும்ப சுகம், தொழில் சிந்தை.

**கன்னி**

தொழில் வெற்றி. மேன்மை, சுபநிகழ்வு, முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்**

கட்டுப்பாடு, ஆன்றோர் ஆசி, உடல் உழைப்பு, வயிற்றுக் கோளாறு.

**துலாம்**

கடன் பகை, காரிய தடங்கல், வீண் பிரச்சினை, உடல் வியாதி.

**தனுசு**

களஸ்திர சுகம், பிரயாண வசதி, சிநேகிதர் தொடர்பு, முயற்சி கைகூடும்.

**மகரம்**

வியாதி குணமடைதல், சுவாரஸ்யம், தொழில் விருத்தி, பணவருவாய்.

**கும்பம்**

கௌரவம், மனச்சஞ்சலம், காரியதாமதம், திடீர் நன்மை

**மீனம்**

ரோக பயம், தன்னம்பிக்கைக் குறைவு, இனசன பந்தம், முயற்சி தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

-வளவன்

## புனரமைப்புக்கு நிதி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் மேற்கு ஸ்ரீ வைத்தீஸ்வர சனசமூக நிலையப் புனரமைப்புக்கு வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு 3 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. (உ)

# இடை நிறுத்தம்

## படைத் தரப்பு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் இம் மாதம் 10 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் ஜே/305-கல்வயல் கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாத்திரம் மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள், அப்பிரதேசம் பாதுகாப்பற்ற பகுதி என கருதப்படுவதால் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது

மேற்படி பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகள், மற்றும் கண்ணிவெடிகள் போன்றவற்றை முழுமையாக அப்புறப்படுத்தி பாதுகாப்பான பகுதி என பூரணமாக உறுதி செய்த பின்பு மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட பிரிவில் மீளக்குடியமரும் மக்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களை நுணாவில் சிவில் நிர்வாகக்காரியாலயத்தில் மீண்டும் கையளிக்கும் படியும், மீளக்குடியமர அனுமதிக்கும் வரை எவரும் இப் பகுதியில் மீளக்குடியேறச் செல்லவேண்டாம் என்றும் மேலும் படைத் தரப்பு அறிவுறுத்தியுள்ளது.

(உ)

# விடுதலையான இருவர் தொடர்ந்தும் சிறையில்

## பயணஅனுமதி கிடைக்கவில்லையாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட இருவர் தொடர்ந்தும் யாழ். சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதாகி யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வன்னி புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தோமஸ் ராஜ்குமார், விசுவமடுவைச்சேர்ந்த கந்தசாமி ரேணுகா ஆகிய இருவரையும் கடந்த மாதம் 7 ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது நீதிபதி இ. த. விக்னராஜா சட்டமா அதிபரின் பணிப்பின்பேரில் விடுதலை செய்வதாக உத்தரவிட்டார்.

இருந்த போதிலும் இவர்களுக்கான பாதுகாப்பு அனுமதி இதுவரை கிடைக்காமையினால் தொடர்ந்தும் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும்,

அனுமதி கிடைத்ததும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மூலம் இருவரும் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவர் எனவும் நீதிவான் தெரிவித்தார். (உ-6)

### இன்று ஒரு தகவல்

## மன்னரும் மந்திரியும்

ஒரு நாள் பீர்பாலுடன் அக்பர் உரையாடுகையில் 'கிருஷ்ண பரமாத்மாவின் லீலைகளிற் சிலவற்றைத் தான் ரசிக்கவில்லை என்றார். அவர் பீர்பாலைப் பார்த்து, ஒரு யானையின் அலறல் சத்தத்தைக் கேட்டு, கிருஷ்ணன் தானே ஓடி வந்து அதற்கு உதவி செய்ததாகக் கூறப்படுகிறதே! ஏன் அவருக்குப் பணியாட்கள் யாரும் இல்லையா உதவிசெய்வதற்கு' என்று கேட்டார்.

அதற்கு அவரின் மந்திரி பீர்பால் 'நான் நாளை இதற்கு பதில் உரைக்கிறேன்' என்றார் மறு நாள் மன்னரின் பேரப்பிள்ளையை எடுத்து வளர்க்கும் பணியாளைக் கூப்பிட்டு, அவனிடம் மன்னரின் பேரப்பிள்ளை மாதிரியே மெழுகினால் செய்யப்பட்ட ஒரு பொம்மையை அதற்குத் தகுந்த உடைகளுடன் கொடுத்து 'மாலை மன்னன் காற்று வாங்க இங்கு வரும்போது, அவர் பார்வைக்கு அவர் எதிரில் இதை எடுத்துக்கொண்டு போகவும். அவர் உன்னைக் கூப்பிடும் போது, நீ அருகில் இருக்கும் குளத்தில் சறுக்கி விழுகிறமாதிரி இந்தப் பொம்மையுடன் விழுந்து விடவும்' என்று சொல்லி விட்டுச் சென்றார். மாலையில் மந்திரியுடன் மன்னர் அக்பர் உலாவ நந்தவனத்திற்குச் சென்றார். அப்போது அங்கு தனது பேரப்பிள்ளையை வைத்திருப்பதைப்பார்த்து. பாசத்தின் காரணமாக அவனைக் கூப்பிட்டார். அப்பொழுது அவன் அவரிடம் வருவதற்குள், அருகில் இருக்கும் குளத்தில் குழந்தையுடன் விழுந்து விட்டான். அக்பர் தனது பேரப்பிள்ளை நீரில் மூழ்கி உயிர் துறந்து விடுவானோ என்ற பயத்தினால், குளத்தில் குதித்து அந்த மெழுகுப்பொம்மையை எடுத்தார். பீர்பாலும் மன்னருடன் ஓடி 'தங்களுக்குப் பணியாட்களே இல்லையா? நீங்கள் ஏன் குளத்தில் குதித்தீர்கள்? இது தான் பாசம். அன்பு எனப்படுவது. தாங்கள் எப்படி உங்கள் உறவினரிடம் பாசம் வைத்திருக்கின்றீர்களோ, அதே மாதிரி, கிருஷ்ணரும் தனது உண்மையான பக்தர்களிடத்தில் அன்பும் பாசமும் வைத்திருக்கிறார்' என்று மொழிந்தார்.

அக்பர் தான் முதல் நாள் கேட்ட கேள்வியை ஞாபகப் படுத்திக்கொண்டு அதற்குப் பீர்பாலின் தற்போதைய விடையைக் கேட்டு மகிழ்ந்தார். □

ஓவியர் அ. சீனு

ஜனாதிபதியின் பாணியில்

## வர்த்தகப் பிரமுகர்களை சந்திக்க ஐக்கிய தேசியக்கட்சி ஏற்பாடு

கடந்தவாரம் ஜனாதிபதி குமாரதுங்க வர்த்தகத்துறை தலைவர்களைச் சந்தித்து உரையாடியதைத் தொடர்ந்து, எதிர்க்கட்சிகளின் அணியும் ஓகஸ்ட் 20 ஆம் திகதி வர்த்தகப் பிரமுகர்களையும், தொழில்சார் நிபுணர்களையும் சந்தித்து உரையாடவுள்ளது.

நாட்டின் இன்றைய அரசியல், பொருளாதார நெருக்கடி பற்றியும், அராஜக நிலையிலிருந்து நாட்டை காப்பாற்றுவதற்கு சகல கட்சிகளும் இணைந்த ஒரு தேசிய ஐக்கிய நல்லிணக்க அரசாங்கமொன்றை அமைப்பது பற்றியும் இச்சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.

ஜனநாயகத்திற்கானமக்கள் இயக்கம் இதனை ஏற்பாடுசெய்துள்ளது அதன் அழைப்பாளரான ஐ தே கதுணைத்தலைவர் காமினி அத்துக்கோறளை இதுபற்றித் தெரிவிக்கையில்; ஐ தே க. தலைவர் ரணில்விக்கிரமசிங்க. பிரதித்தலைவர் கருஜயசூரிய, மற்றும் கூட்டுக் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோர் உரையாற்றவுள்ளதாக தெரிவித்தார்.

அரசியல் ஆய்வாளர்கள் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்; அரசாங்கத்துடன் ஒருபொது உடன்பாட்டின் அடிப்படையில் அரசாங்கம் அமைப்பது தொடர்பாக ஐ தே. க வின் கருத்தை அறிவதற்கு வர்த்தகத்தலைவர்களுக்கு ஒருவாய்ப்பு கிடைத்துள்ளதாக கூறியுள்ளனர் (உ)

### வாய்க்கால்கள் திருத்தம் இல்லை

(சுண்டுக்குளி)

சுண்டுக்குளிப் பகுதியில் வீதியோரங்களில் உள்ள வாய்க்கால்கள் நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் உள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மழைக்காலம் ஆரம்பிக்க உள்ளதால் இப்பணி விரைவுபடுத்த வேண்டியது அவசியம் என்றும் பலராலும் வற்புறுத்தப்பட்டுள்ளது

வெள்ளம் தேங்கி நின்று, மலேரியா நோய்பரவும் அபாயம் ஏற்படுவதை தடுக்கும் முகமாகவே இவ் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன. (க-110)

### புதிய தலைவர் தெரிவு

[கோப்பாய்]

வலி கிழக்குத் தென் பகுதி ப.நோ.கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் எஸ் ஏகாம்பரநாதன் இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து தற்போது சங்கத்தின் புதிய தலைவராக சமாதானநீதவான் த. கிருஷ்ணராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார். [உ-79]

### சடலம் மீட்பு

(கொழும்பு)

கண்டி தென்னக்கும்புரம் பீரிஸ் பகுதியில் துர்நாற்றம் வீசிய நிலையில் ஆணின் சடலம் ஒன்றை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இவரது சடலம் கண்டி வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பொதுமக்களைப் பொலிசார் கேட்டுள்ளனர். [ந-5]

### கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் சிகிரியாவுக்கு மாற்றம்?

[கொழும்பு]

கட்டு நாயக்கா விமானநிலையம் விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டதின் எதிரொலியாக விமானப் படைத்தளத்தை சிகிரியாவுக்கு மாற்றுவதற்கு திட்டமிடப் பட்டுள்ளதாக விமானப் படைஉயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமானப் படைத்தளம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு அண்மையில் இருப்பதால்பாதுகாப்பு அச்சுறுத்தல் எந்நேரமும் இருக்கும் என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்ததை அடுத்தே விமானப் படைத் தளத்தை சிகிரியாவுக்கு மாற்றுவதற்கு ஆலோசிக்கப்படவுள்ளதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

### மீளக்குடியமர முன் சேத விபரங்களை மதிப்பிடுமாறு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சிப்பகுதியில் இருந்து இடப்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு முன்பாக அப்பகுதிப் பிரதேச செயலர்கள் அறிவித்தல் வழங்கி கிராம சேவையாளர் மூலம் சேத மதிப்பீடுகளைத் திரட்ட நடவடிக்கை எடுக்குமாறு அகிலஇலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் யாழ் மாவட்ட எம் பி அ. விநாயகமூர்த்தி யாழ் அரச அதிபரைக் கடித மூலம் கோரியுள்ளார்.

ஐயாயிரம் ரூபாவினைக் கொடுத்து தென்மராட்சி மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதிலும் பார்க்க அவர்களுக்குரிய சேதவிபரங்களை கிராமசேவையாளர்கள் மூலமாகவே திரட்ட வேண்டுமென்றும் அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார் (ம)

### பாம்பு தீண்டியது

[மந்திகை]

பாடசாலையில் அடுக்கியிருந்த விறகினை எடுத்த சிற்றூழியர் அதனுள் இருந்த பாம்பு தீண்டியதால் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

வேலாயுதம் மகாவித்தியாலய சிற்றூழியரான துன்னாலை தெற்கை சேர்ந்த எஸ். தங்கவடிவேல் என்பவரே பாம்பினால் தீண்டப்பட்டவராவார். (உ-23)

திவ்வியனிடம் இருந்ததாகக் கூறப்படும்

### ஆயுதத்தை செயலிழக்கச் செய்வதற்கு நீதிபதிமறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் நேற்றுமுன் தினம் யாழ். நீதிமன்றில் நீதி

இதற்கு பதிலளித்த நீதவான் கொழும்பிலுள்ள இரசாயனப் பகுப்பாய்வாளரை அல்லது அவர்தகுதியென

### அமைச்சர் டக்ளஸ் தாக்கப்பட்ட விசாரணை இரு சந்தேகநபர்களுக்கு பிணை

(களுத்துறை)

களுத்துறைச் சிறைச்சாலையில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான சந்தேகநபர்கள் இருவர் நேற்று

பிணையிலும் ஆயிரம் சரீரப் பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ் வழக்கு விசாரணையின் போது அரசுதரப்பு சட்டத்தரணி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசாரணைக்கு வருவார் என்று தான் எதிர்பார்க்கவில்லை என்றும்

### பட்டப்பகலில்

மாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் யாழ் மாவட்ட எம் பி அ. விநாயகமூர்த்தி மூலமாகவே திரட்ட வேண்டுமென்றும் அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார் (ம)

திவ்வியனிடம் இருந்ததாகக் கூறப்படும்

# ஆயுதத்தை செயலிழக்கச் செய்வதற்கு நீதிபதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் நீதிவான் இ. த. விக்கினராஜா முன்னிலையில் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்டார்.

திவ்வியனை கைது செய்த போது அவரிடமிருந்து படையினரால் எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் ஆர்.பி.ஜி சுடுகலனை செயலிழக்கவைப்பதற்கான அனுமதியை காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்பு பொறுப்பதிகாரி சார்பில் ஆஜரான பொலிஸ் உத்தியோகத்தர் அபயசேகர நீதவானிடம் கோரினார்.

இதற்கு பதிலளித்த நீதவான் கொழும்பிலுள்ள இரசாயனப் பகுப்பாய்வாளரை அல்லது அவர் தகுதியென காணும் ஒருவரை யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்து அவரது அறிக்கையினை நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

மேலும் திவ்வியனை விடுதலை செய்ய சட்டமாஅதிபரின் பணிப்புரை கிடைக்காததால் இம் மாதம் 28ம் திகதிவரை அவரைவிளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்

(ந-5-6)

# பேரியல்-ஹிஸ்புல்லா மீது பொதுமக்கள் கல்வீச்சு!

(மட்டக்களப்பு)

கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு அமைச்சர் பேரியல் அஷ்ரப் மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா ஆகியோர் பயணம்செய்த வாகனத் தொடரணி மீது நேற்றுமுன்தினம் கல்வீச்சு நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு காத்தான்குடியில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு பலத்த பாதுகாப்புடன் கொழும்பு நோக்கித்திரும்பிக்கொண்டிருந்த வாகனத் தொடரணிமீது ஓட்டமாவடியில் கூடிநின்ற பெருமளவானமக்கள் வாகனங்களை நோக்கி கற்களைவீசினர் இதனால் வாகனங்களின் கண்ணாடிகள் உடைந்துநொருங்கின.

நிலைமையைக் கட்டுப்படுத்தி பொதுமக்களை அவ்விடத்தைவிட்டு விரட்ட வாகனப் பாதுகாப்பணியினர் வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்,

இதேவேளை பாதுகாப்பு பிரிவின் சிலர் பொதுமக்களைத் தாக்கமுற்பட்டபோது அவர்கள் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டனர்.

(இ)

ருந்த விறகினை எடுத்த சிற்றூழியர் அதனுள் இருந்த பாம்பு தீண்டியதால் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேலாயுதம் மகாவித்தியாலய சிற்றூழியரான துன்னாலை தெற்கை சேர்ந்த எஸ். தங்கவடிவேல் என்பவரே பாம்பினால் தீண்டப்பட்டவராவார். (உ-23)

## பட்டப்பகலில் 12 லட்சம் கொள்ளை

(மொறட்டுவ)

மொறட்டுவ எகொட உயன பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் 12 இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

ஜீப்வண்டியில் பணம் எடுத்து செல்லப்பட்டவேளை இக்கொள்ளை இடம் பெற்றுள்ளதுடன் துப்பாக்கிபிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் வாகனத்திலிருந்த ஒருவர் காயமடைந்துமுள்ளார். (ந-3)

## சிற்றிஒவ் றிங்கோ 21ம் திகதி முதல் பயணச்சீட்டு

(யாழ்ப்பாணம்)

சிற்றி ஒவ் றிங்கோ கப்பல் பயணிகளுக்கான பயணச்சீட்டுகள் எதிர்வரும் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் வழங்கப்படவுள்ளதாக றான் அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்,

காங்கேசன் துறையிலிருந்து திருகோணமலை செல்வதற்கான இருவழி பயணகட்டணமாக 3200 ரூபா அறவிடப்படுமெனவும் அறிவித்துள்ளனர், (ந-5)

# அமைச்சர் டக்ளஸ் தாக்கப்பட்ட விசாரணை

## இரு சந்தேகநபர்களுக்கு பிணை

(களுத்துறை)

களுத்துறைச் சிறைச்சாலையில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான சந்தேகநபர்கள் இருவர் நேற்று முன்தினம்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றவிசாரணையின்போது சந்தேகநபர்கள் இருவரும் பிணையில்விடுதலை செய்யப்பட்டனர்.

இரத்தினசபாபதி மோகனசுந்தரம், சபாரட்ணம் நகுலேஸ்வரன் ஆகிய இருவருமே 15 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 1½ ஆயிரம் சரீரப் பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வழக்கு விசாரணையின் போது அரசுதரப்பு சட்டத்தரணி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசாரணைக்கு வருவார் என்று தான் எதிர்பார்க்கவில்லை என்றும் அடுத்த தவணைவரை அவகாசம் கொடுத்து அவர் வராதுபோனால் அவரது சாட்சியம் இல்லாமலே வழக்கைப் பூர்த்திசெய்வதென்றும் தெரிவித்துள்ளார்;

சந்தேக நபர்கள் சார்பில் யாழ். மாவட்ட எம்.பியும் சட்டத்தரணியுமான அ. விநாயகமூர்த்தி ஆஜராகி இருந்தார், (வ)

# டி.என்.ஏ.பரிசோதனைக்கு நீதிபதி உத்தரவு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானத் தளத் தாக்குதலின் போது உயிரிழந்த விடுதலைப் புலிகளின் சடலங்களை அடையாளம் காணும் பொருட்டு டி.என்.ஏ. பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீர்கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி எம். என் புரான் உத்தரவிட்டுள்ளார்.

கட்டுநாயக்கா விமானப் படைத் தளத் தாக்குதலின் போது உயிரிழந்த விடுதலைப் புலிகளின் சடலங்கள் தற்போது ராகமவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

ராகம வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ள சடலங்களின் ஒருபகுதியையும், இரத்தத்தையும் எடுத்து டி.என்.ஏ. பரிசோதனைக்கு உட்படுத்தி சடலங்களை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீதிவான் எம் என். புரான் உத்தரவிட்டதுடன் தாக்குதல் நடைபெற்றபோது கடமையில் இருந்த குறூப் கப்டன் டி பி. ஏ மெண்டிஸ் உட்பட 5 படையினரை நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வருமாறும் உத்தர விட்டுள்ளார்.

இதேவேளை படையினரால் கைப்பற்றப்பட்ட வெடிமருந்துகளையும் இரசாயனப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்;

(ம)

# சமூக நீதியில் சமநிலையை பேணி ஒற்றுமையைக் கட்டிக்காக்கவேண்டும்

## இந்திய சுதந்திர தினச் செய்தியில் குடியரசுத் தலைவர்

(புதுடில்லி)

உங்கள் வாழ்வில் திருப்புமுனையாக ஜனநாயகத்தையும் விருப்பு ஒற்றுமையையும் பேண வேண்டும்.

இந்தியாவின் 55வதுகுடியரசு தினத்தை ஒட்டி குடியரசுத் தலைவர் கே. ஆர். நாராயணன் வானொலியில் நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரையில் இவ்வாறுகுறிப்பிட்டார். சுதந்திரம் சமூக நீதி என்பவற்றுக்கிடையே சம நிலையைப் பேண வேண்டும். நமது நாட்டின் ஒற்றுமை இரும்பாலும் தடிகளாலும் இரத்தத்தாலும் உருவாக்கப்பட்டது அல்ல. சகிப்புத் தன்மை மனிதாபிமானம் அணுகு முறை நாகரிகமான நேர்மையான நடை முறையால் உருவாக்கப்பட்டது என்று அவர் மேலும் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ்வுரையில் குறிப்பிடுகையில் பாதுகாப்புமறறும் துணை ராணுவப் படையினர், விவசாயிகள் கைவினைஞர்கள், பொறியியாலளர்கள் விஞ்ஞானிகள் பற்றிதான் பெருமிதம் கொள்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, இந்தியாவின் விடுதலைக்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் புரிந்த தியாகங்களால்தான் நாங்கள் தலை நிமிர்ந்து நிற்கிறோம். என்று நாட்டுமக்களுக்கு நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டார். (து)

## காங்கிரஸ் மூப்பனாருக்கு புற்றுநோய்

(சென்னை)

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் புற்று நோயினால் அவஸ்தைப்படுவதாகவும் அவருடைய நிலைமை மிகமோசமாக இருப்பதாகவும் மருத்துவமனைக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

(து)

## கிழக்கு திமோரில் மனித உரிமை மீறல்கள் தலைவர்கள் கலந்துரையாடினர்

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய கிழக்கு திமோரில் மனித உரிமைகள் மீறப்பட்டது குறித்து அவுஸ்திரேலியப் பிரதமர் யோன் காபேட்டும் இந்தோனேஷிய அதிபர் மேகவதி சுகர்ணோ புத்திரியும் கலந்துரையாடியுள்ளனர்;

மேகவதிசுகர்ணோ புத்திரி அதிபராகப் பதவியேற்றதன் பின், முதன் முறையாக அவுஸ்திரேலியப் பிரதமர் யோன் காபேட் இந்தோனேஷியா சென்றபோதே இப் பேச்சுக்கள் இடம் பெற்றன.

மேற்படி, பேச்சுக்களின் போது இந்தோனேஷியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு அவுஸ்திரேலியா உதவத் தயாராக இருப்பதாகவும் இரு நாட்டு உறவுக்கும் இச் சந்திப்பு அத்திவாரமிட்டுள்ளதாகவும் பிரதமர் காபேட் தெரிவித்தார்

அவுஸ்திரேலிய பிரதமரின் மேற்படி விஜயம் வரலாற்று முக்கியத்துவம் வாயந்ததென அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்; (து)

## சமாதான முன்முயற்சிகள் மத்தியில் பாரிய மோதல்கள்

[ஸ்கொப்ஜே]

மசடோனியாவில் அல்பேனிய கிளர்ச்சியாளர்களின் 8மாத வன்முறைகள் முடிவுக்கு வரும் வேளையில் மீண்டும் அங்கு பெரும் மோதல்கள் இடம் பெற்று வருகின்றன.

மசடோனியாவில் தொடர்ந்தும் ஷெல் தாக்குதல் இடம் பெறுவதாகவும் தலைநகர் ஸ்கொப்ஜே பகுதியில் திரள் திரளாக புகை மண்டலம் எழுவதாகவும் தெரிய வருகிறது.

அல்பேனியக் கிளர்ச்சியாளர்கள் மசடோனிய அரசின் பொலிஸ் நிலைய மொன்றை தாக்கி முற்றாக அழித் துள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இவ்வன்முறைகளை ஒழித்து சமாதான ஒப்பந்தம் ஒன்றில் மசடோனிய அல்பேனிய அதிகாரிகள் கைச்சாத்திட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அதன் உண்மை நிலை இதுவரை தெரிய வரவில்லை.

(உ-7)

## முருக வழிபாட்

[7ம் பக்கத் தொடர்ச்சி]

காவடி, தேர்க்காவடி, அனுமார்க் காவடி போன்ற ஆட்டங்கள் மயிர்கூச் செறியும் வண்ணம் நடை பெறும். உரு ஏறி இங்கு மக்கள் ஆடும் வெறியாட்டு ஆட்டம் பரவமானது பூங்கா, சப்பறம், தேர், தீர்த்தம் ஆகிய திருவிழாக்கள் பெரு விழாக்களாக நடை பெறும். பூக்காரர் என்போர் விழாக்களில் முக்கிய பங்கெடுப்பார். பூவினால் செய்யப்பட வேண்டிய அலங்காரங்களை இவர்கள் விமரிசையாகச் செய்வர். பூங்காவனத் திருவிழாவில் சுவாமியின் இருப்பிடம் வண்ண வண்ணப் பூக்களால் அலங்கரிக்கப்படும். சுவாமிக்குச் செய்யும் சாத்துப்படி அழகிற்கு அழகு செய்வது போல் கண்களிக்கக் காட்சி தரும். இங்கு ஓடும் தொண்டைமானாறு வல்லி நதி என்னும் பெயருடன் விழங்கியது. ஒல்லாந்தரின் பதி வேட்டில் மருதர் கதிர்காமருடன் தொடங்கி சந்நிதி வரலாறு காணப்படுகிறது;

### ஈழநல்லூர்

ஈழத்தமிழரின் பழந்தலை நகராகப்புகழ் பெற்றது நல்லூர். நல்லூரிலுள்ள கந்தசுவாமி கோயில ஈழத்திலுள்ள இந்துக்கோயில்களில் தலைசிறந்ததாகும். 15 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கோட்டை அரசனாகியபராக்கிரமபாகுவால் அனுப்பப்பட்ட செண்பகப்பெருமாள் என்பவன் யாழ்ப்பாணம் வந்து இக்கோயிலைக் கட்டுவித்தான். இவனை ச்சிங்களவர் ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு என்னும் சிங்களப் பெயரிட்டு அழைத்தனர். 1478ஆம் ஆண்டு வரை அரசாண்ட சிங்கைப் பரராசசேகரன் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில்

ளாகியமாருதப்பிரவாகவல்லி குன்மநோயினால் பீடிக்கப்பட்டு அதனைத் தீர்ப்பதற்கு யாத்திரை செய்து கீரிமலையிலே நீராடி நோய் நீங்கியதால் முருகப்பெருமானுக்குக் கட்டியெழுப்பிய கோயிலே மாவிட்டபுரம் என்பர். இது பெரிய அகன்ற வீதிகளையும் பெரிய கோபுரத்தையும் கொண்டு விளங்கியது. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இக்கோயில் தரைமட்டமாக்கப்பட்டது ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் விளாங்குளப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட கருங்கல்லால் புதிய கோயில் அமைக்கப்பட்டது இங்கு 23 நாட்கள் திருவிழாக் கொண்

## பாகிஸ்தானுடன் உறவை மேம்படுத்த வாஜ்பாய் விருப்பம்

(புதுடில்லி)

பாகிஸ்தானுடன் சமாதானம் நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக இந்திய பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார்

பாகிஸ்தானின் சுதந்திர தினத்தையொட்டி அதிபர் ஜெனரல் முஷாரப்பிற்கு அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்தியிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சென்றமாதம் நடந்து முடிந்த ஆக்ரா உச்சிமாநாட்டில் முறைபான உடன்பாடு எதுவும் ஏற்படாது போனாலும் அதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்,

இருதரப்பும் உடன்பாடுகளை எட்டுவதற்கு பேச்சுவார்த்தைகள் மேலும் தொடரவேண்டும் என்று வாஜ்பாய் தெரிவித்துள்ளார்; (சு)

## இந்திய சுதந்திர தினத்தன்று பலத்த பாதுகாப்பு மத்தியிலும் குண்டுவெடிப்பு! 3பேர்பலி

(புதுடில்லி)

இந்தியாவின் வடக்கே இடம்பெற்ற ரயில் குண்டு வெடிப்பில் 3 பயணிகள் பலியானதுடன் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்;

உத்திரப் பிரதேசத்தில் மோடி நகருக்கும் மொறாட் நகருக்கும் இடைப்பட்ட பகுதியில் பயணம்செய்த ரயிலில் இக்குண்டு வெடிப்பு இடம் பெற்றதாக தெரியவருகிறது

இந்தியாவின் சுதந்திரதினமான நேற்று பொலிஸ் பாதுகாப்பு அதிதீவிரமடைந்து காணப்பட்ட போதிலும் இக் குண்டுவெடிப்பு இடம் பெற்றுள்ளது;

அதிகாரிகள் பலரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளதுஎன அமைச்சரவை செயலளர் ஒருவர் தெரிவித்தார். (உ-7)

## இலவச கண் பரிசோதனை முகாம் 19ஆம் திகதி

(புலோலி)

வைர மாளிகை அமரர் இளையநாச்சியினதும் அமரர் மாணிக்கத்தினதும் ஞாபகார்த்தமாக பருத்தித்துறை நகர எல்லைக்குட்பட்ட மக்களுக்கான இலவச கண் பரிசோதனை முகாம் இம்மாதம் 19ஆம் திகதி பருத்தித்துறை வர்த்தகர் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை வர்த்தகர் சங்கமும் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே. மயிலேறும் பெருமாளும் இணைந்து இக்கண் பரிசோதனை முகாமை நடத்தவுள்ளனர்;

கண் வைத்திய பரிசோதனை முகாமில் வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ள விரும்புவர்கள் இம்மாதம் 17 ஆம், 18ஆம் திகதிகளில் பருத்தித்துறை வர்த்தகர் சங்க காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கண் வைத்திய முகாமின்போது கண்ணாடி பெறச் சிபார்சு செய்பவர்களுக்கான இலவச கண்ணாடிகள் கொழும்பிலிருநது வருவிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளது.

40 வயதிற்கு மேற்பட்ட 200 பேருக்கு கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-52,

[ஸ்கொப்ஜே]

மசடோனியாவில் அல்பேனிய கிளர்ச்சியாளர்களின் 8மாத வன்முறைகள் முடிவுக்கு வரும் வேளையில் மீண்டும் அங்கு பெரும் மோதல்கள் இடம் பெற்று வருகின்றன.

மசடோனியாவில் தொடர்ந்தும் ஷெல் தாக்குதல் இடம் பெறுவதாகவும் தலைநகர் ஸ்கொப்ஜே பகுதியில் திரள் திரளாக புகை மண்டலம் எழுவதாகவும் தெரிய வருகிறது.

அல்பேனிய கிளர்ச்சியாளர்கள் மசடோனிய அரசின் பொலிஸ் நிலையமொன்றை தாக்கி முற்றாக அழித்துள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இவ்வன்முறைகளை ஒழித்து சமாதான ஒப்பந்தம் ஒன்றில் மசடோனிய அல்பேனிய அதிகாரிகள் கைச்சாத்திட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அதன் உண்மை நிலை இதுவரை தெரிய வரவில்லை.

(உ-7)

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

## 'சாவுகள்' இருவகை

ஒவ்வொருவரும் இரண்டு தரம் இறக்கின்றோம் என்றால் மலைப்பாக இருக்கின்றதா?

ஆம்! ஒவ்வொரு மனிதனும் அறிவியல் அடிப்படையில் இரு இறப்புக்களைச் சந்திக்கிறான் ஒன்று மருத்துவ இறப்பு. மற்றையது உயிரியல் இறப்பு இதயமும், நுரையீரலும் இயக்க மற்றுப் போவது மருத்துவ இறப்பு என்கிறோம் அவற்றின் இயக்கத்தை வைத்தே பொதுவாக அவர் இறந்து விட்டார் எனக்கூறுகிறோம். ஆனால் உண்மையில் அவற்றின் இயக்கமும் நின்று போனாலும் கூட உடலில் சில இழையங்கள் உடனடியாக இறப்பதில்லை. வைத்திய இறப்பின் பின் 5 நிமிடத்தின் பின்னரே இவை இறந்து போகும். இதுவே உயிரியல் இறப்பாகும்.

## உலகின் மிகப் பெரிய நூல்

உலகிலேயே பென்னாம் பெரிய நூல் எது தெரியுமா?

'தென்னாட்டின் கதை' என்ற அமெரிக்க நூலே இதுவரை மிகப் பெரிய நூலாக இருந்து வருகிறது.

1925 ஆம் ஆண்டு வெளியாகிய இந்நூலின் உயரம் மட்டும் 6 அடி 10 அங்குலம். அதாவது உங்களை விடவே உயரமான புத்தகம் இதன் அகலம் ஒன்பது அடி இரண்டங்குலம். இந்த நூலின் மேலட்டை மாட்டுத் தோலால் ஆனதாம். இதற்கு அட்டை போடுவதற்கு ஒரு முழு மாடு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

- அவதானி

...நூற்றாண்டின் நடுப்பகுதியில் கோட்டை அரசனாகியபராக்கிரமபாகுவால் அனுப்பப்பட்ட செண்பகப்பெருமாள் என்பவன் யாழ்ப்பாணம் வந்து இக்கோயிலைக் கட்டுவித்தான். இவனை ச்சிங்களவர் ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு என்னும் சிங்களப் பெயரிட்டு அழைத்தனர். 1478ஆம் ஆண்டு வரை அரசாண்ட சிங்கைப் பரராசசேகரன் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில் 'யமுனா ஏரி' குளத்தையும் தன் தலை நகருக்குக்கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார் கோயிலையும், மேற்கில் வீரமாகாளியம்மன் கோயிலையும், வடக்கில்சட்டநாதர் கோயிலையும், தெற்கில் கையிலைநாதர்கோயிலையும் கட்டுவித்தான்.

17 ஆம் நூற்றாண்டின்முற்பகுதியில் இக்கோயிலைப் போர்த்துக்கேயர் தரைமட்டமாக்கினர். அதன் பின்னர்சுப்பையர், கிருஷ்ண ஐயர் என்பவர்கள் குருக்கள் வளவு என்னும் இடத்தில் சிறு கோயில் ஒன்றினைக் கட்டினர் இதில் வேல் ஒன்று நிறுவப்பட்டுப் பூசை நடைபெற்றது. கந்தப் புராணப்படிப்பு ஒழுங்காக நடை பெற்றது. தற்போதுள்ள நல்லூர் ஆலயம் 1793 ல் இன்றிருக்கும் இடத்தில் கட்டப்பட்டதாகத் தெரியவருகின்றது. இரகுநாத மாப்பாண முதலியார் பரம்பரையினர் தற்போது கோயிலை நிர்வகிக்கின்றனர். யாழ்ப்பாணாயன் பட்டின மேவிய பெருமாள் என அருணகிரியார் நல்லூரைப்பற்றிப்பாடியுள்ளார்.

## மாவிட்டபுரம்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வரலாற்றுப் புகழ் மிக்கது. சோழநாட்டுத் தேசாதிபதி ஒருவனின் மகளால் முருகப்பெருமானுக்குக் கட்டியெழுப்பிய கோயிலே மாவிட்டபுரம் என்பர். இது பெரிய அகன்ற வீதிகளையும் பெரிய கோபுரத்தையும் கொண்டு விளங்கியது. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இக்கோயில் தரைமட்டமாக்கப்பட்டது ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் விளாங்குளப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட சருங்கல்லால் புதிய கோயில் அமைக்கப்பட்டது இங்கு 23 நாட்களா திருவிழாக் கொண்டாடி 24 ம் நாள ஐந்து தேர்கள் தொடரத் தேர் விழா நடத்தி மறுநாள் ஆடி அமாவாசையில் நகுலதீர்த்தமாகிய கீரிமலையில்முருகன் தீர்த்தமாடி மறு நாள் மாவிட்டபுரம் செல்லும் அற்புதநிகழ்வு நடை பெறும். தற்போது ஈழப்போரினால் ஆலயம்மீண்டும் சிதைவுற்றுள்ளது. நல்லூர்க்கந்தனை அலங்காரக் கந்தனென்றும், செல்வச்சந்நிதிக்கந்தனை அன்னதானக் கந்தனென்றும், மாவிட்டபுரக்கந்தனை அபிஷேகக் கந்தன் என்றும் கூறும் வழக்கு உண்டு.

கலியுக வரதன் கந்தப்பெருமான் கருணை பசர்ப்பதில் விஞ்சப்படாதான். எந்தப் பெரும் துன்பத்தையும் தனது அருட்பந்தத்தினால் அகற்றுவான் அரசன் அன்றறுக்கும் தெய்வம் நின்று அறுக்கும் என்பர். அறுப்பார் செய்கின்ற ஆற்றொணாத் துன்பங்களை யெல்லாம் ஒறுப்பானாக ஒரு நாள் அவன் வரத்தான்போகிறான் ஈழவள நாட்டின் எல்லாத்திக்கிலும் காவல்காத்து நிற்கும் கந்தன்எமக்குநிச்சயம் மீட்புத்தருவான். நம்புங்கள் கந்தன் நமக்கு அருள்வான்

'சுற்றி நில்லாதே போ
பகையே
துள்ளி வருகுது வேல்'

□

இக்கண் வைத்திய முகாமின்போது கண்ணாடி பெறச் சிபார்சு செய்பவர்களுக்கான இலவச கண்ணாடிகள் கொழும்பிலிருநது வருவிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளது.

40 வயதிற்கு மேற்பட்ட 200 பேருக்கு கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-52)

# விண்ணப்பம் கோரல்

(மானிப்பாய்)

இலங்கை பொலிஸ் சேவையிலுள்ள பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிகளுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட திருமணமாகாதவராயும க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தமிழ் அல்லது ஆங்கிலம் அல்லது சிங்களம் உட்பட ஆகக் குறைந்தது 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்கள யாவும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம்27ம் திகதிக்கு முன்னர் பொலிஸ் ஆட்சேர்ப்புப் பணியகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது பற்றிய முழு விபரங்களும் யூலை 27ந் திகதி வெளிவந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(க-120)

இளைதாக முள்மரம்கொல்க -களையுநர்
கை கொல்லும் காழ்ந்து விடத்து
குறள்

வலம்புரி

## குண்டர்களை வெளியேற்றுக;

நல்லூர் மகோற்சவ காலத்தில் கடந்தசில வருடங்களாக இளைஞர்களின் சேட்டைகளும், அட்டகாசங்களும் அதிகரித்து வருவது தெரிந்ததே. ஆலய வீதியில் சினிமாப்பாணியில், சுற்றித் திரிவதும், கலாட்டா செய்வதும், பெண்கள்மீது விரசச்சேட்டை விடுவதும் சாதாரணவிடயமாகி விட்டது.

தட்டிக் கேட்பார் இல்லையென்பதற்காக தம்பிமார் சண்டப் பிரசண்டமாக நடப்பது அவ்வளவு நல்லதல்ல. அதிலும் நல்லூர்த் திருவீதி அற்புதமான பெரு வீதி. இவ் வீதியில் நடமாடியவர்கள் டெனிம் ரவுசரும், சப்பாத்தும், கறுப்புக் கண்ணாடியும் போட்ட காவாலிகளல்ல. உலகப் பற்று நீத்த ஞானிகளே நடமாடினர். அத்தகையோர் இன்றும் அத் திரு வீதியில் வலம் வந்து கொண்டேயிருக்கின்றனர். நம்ஊனக் கண்ணுக்கு தெரியவில்லையெனபதற்காகநிகழ்வுகள் நடைபெறவில்லையெனக் கருதுவது மடமையானது.

நல்லூர் ஆலய வீதியில் வாள் வீச்சும், வம்புத்தனமும் செய்தவர்கள் இந்தப் பூமியில் நிம்மதியாக வாழ்ந்ததாக வரலாறில்லை.

இதற்கு மேலாக தொண்டர்களென்று கூறிக்கொள்வோர் விடும் அட்டகாசத்தைப் பார்த்தால் நெஞ்சம் துணுக்குறும். நல்லூர் வீதியில சேவையில ஈடுபட்டுள்ள சில தொண்டர்ளையும், அவர்களின் செற்பாடுகளையும் பார்க்கும்போது [illegible]

# முருக வழிபாட்டின் சிறப்பினை நிலைநாட்டும்
# ஈழநாட்டிலுள்ள ஏற்றமிகு முருகன் ஆலயங்கள்

**நா. க. சண்முகநாதபிள்ளை**

கி.மு. 3ம் நூற்றாண்டில் பௌத்தம் ஈழத்திற்கு அறிமுகமாகு முன்னர் ஈழத்து மக்களின் சமய நம்பிக்கைகள் பழைய சங்க கால இந்து சமய நம்பிக்கைகளாகவே இருந்தன. மேற்கூறிய கருத்திற்குச் சான்றாக இன்றும் சிங்கள- பௌத்தர்கள் மத்தியில் நாட்டார் வழிபாடாக இந்து சமயக் கடவுளின் வழிபாடும் நடந்து கொண்டிருப்பதைக் கண்டு தெளியலாம், கடவுட் கோட்பாட்டை மறுக்கும் பௌத்தத்தைச் சிங்கள- பௌத்தர்கள் தழுவினாலும் கூட தமது முன்னோர்கள் தழுவிய சமய நம்பிக்கைகளை அவர்கள் கைவிடவில்லை என்பது புலனாகிறது: சங்க இலக்கியங்கள் குறிக்கும் முருக வழிபாடும் தமிழகத்திலிருப்பது போல் ஈழத்திலும் இருந்து வந்திருக்கிறது.

## ஈழத்தில் முருகன் ஆலயங்கள்

இந்த முருக வழிபாடு: வேல், வேலன், ஆறுபடை வீட்டு மரபு, கடம்பமரம் போன்றவற்றின் வழிபாடுகளாக இருந்திருப்பதை அறியக் கூடியதாக உள்ளது. முதற் தமிழ்ச் சங்கத் தலைவராக முருகப் பெருமான் இருந்தாரென இலக்கியங்கள் சாற்றுகின்றன: ஒருகாலத்தில் பரந்து விரிந்திருந்த பழந் தமிழ் நாட்டின் பகுதியாக இருந்த ஈழம் கடற் கோளாறுகளால்பிரிந்து தனித் தீவாகிய போது வழிபாட்டு மரபுகள் அழிந்துபோகாமல்பேணப்பட்டன. கி.மு 483ல் விஜயன் இலங்கைக்குவந்தபோதுஇங்கு வாழ்ந்த இயக்கர், நாகர் போன்ற இனத்தவர் முந்தமிழ் மக்களின் எச்சங்களாக இருந்து சிவனையும் முருகனையும் வழிபட்டனர் என ஆராய்ச்சியாளர் கூறுவர்.

ஈழத்தில் தமிழ் மக்கள் வதியும் பல பகுதிகளில் முருகனுக்குக் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. இவற்றுள் கதிர்காமம், செல்வச் சந்நிதி, மாவிட்டபுரம், நல்லூர், மண்டூர், சித்தாண்டி, வெருகல் ஆகிய இடங்களிலுள்ளவை முக்கியமானவையாகும்: இவற்றுள் கதிர்காமம் முதன்மை பெற்று விளங்குகிறது. மலை மீது வீற்றிருந்து அருள் புரியும் முருகனை

தருபவனாகவும் அருணகிரியார் பாடியுள்ளார். கதிர்காம உற்சவம் என்றால் அக்காலத்தில் முருகனிடம் உத்தரவு பெற்று யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மற்றும் இடங்களிலிருந்து முருக பக்தர்கள் கால்நடையாக இறை பயணம் புறப்பட்டுவிடுவார்கள் இடையில் பாதைமாறிச் செல்வோருக்கு முருகனே மாறு வேடத்தில் சென்று வழிகாட்டியதாகவும் நம்பகமான கதைகள் உண்டு. கதிர்காமத்தலம் முருகனது வேல் போல் முக்கோண வடிவத்தில் அமைந்துள்ளது; பெரிய கோபுரமோ, விமானமோ கிடையாது: கர்ப்பக்கிரகமும் சிறுமண்டபமுமே இக்கோயிலின் உறுப்புகளாகும். கர்ப்பக்கிரகத்தின் வாசலில் திரை இடப்பட்டுள்ளது. மக்கள் வெளிமண்டபத்திலும் கோயில் முன்றிலிலிருந்தும் வழிபடுவர். இங்குகப்புறாளைமார் என்றழைக்கப்படும் பூசகர்களே பூசையில் ஈடுபடுவர். குறித்தகப்புறாளைப் பூசகர் ஈரமஞ்சள் துணியால் வாயை மூடிக்கட்டி வேண்டிய அமுதினைக்காவடியில் எடுத்து உட்பிரகாரங்களில் வைப்பார். பின்னர் வெளியில் வந்து அங்கு தொங்கவிடப்பட்டிருக்கும் வள்ளி தெய்வானை சகிதமாயுள்ள ஓவியம்தீட்டப்பட்ட மறைப்புத் திரையின் முன்நின்று, ஓங்காரவடிவமாகக் கைகளைக் கூப்பி, வழிபாடியற்றுவார். இவ்வழிபாட்டு முறையை ஒருபற்றுமற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருளை வழிபடும் கந்த வழிபாடென்பர்.

## ஞானபூசை என்றும் கூறுவர்

உற்சவகாலங்களில் கர்ப்பக் கிரகத்திலிருந்து பெறப்படும் இயந்திரப் பெட்டியை யானையின் பிடரியில் வைத்து கப்புறாளைமார் தாங்கிப் பிடிக்க முக்கோண வடிவான வீதி வழியாக வலம் வரச் செய்வர். இந்த இயந்திரப் பெட்டியின் இரகசியம் சிதம்பர இரகசியம் போலக் கதிர்காம இரகசியமாகவே உள்ளது. கதிர்கா

வலம் வருவதையே குறிக்கின்றது. இந்த வலம் வருதலின் போது வள்ளியின் மரபினரென்று பெருமையோடு அழைக்கப்படும் பெண்கள் ஆலாத்தி எடுத்தும் சாமரை வீசியும் வாழ்த்தி வணங்குவர். கதிர்காமத்தில் சித்திரை, ஆனி, ஆடி, கார்த்திகை ஆகியமாதங்களில் திருவிழாக்கள் நடைபெறும். ஆனி மாதத்தில்நடைபெறுவதேபிரபல்யமானதாகும். தீர்த்தோற்சவ விழாவை நிறைவு செய்யும் பாங்கில் ஆடிவேல் விழா கொழும்பில் நடைபெறும். இந்தவிழா கதிர்காம யாத்திரையை நினைவூட்டுவதாகப் பண்டு தொட்டு நடைபெறுகின்றது.

## செட்டியார் தெருவில்

நாட்டுக்கோட்டைநகரத்துச் செட்டிமார் கதிரேசன் மீது மிகுந்த பக்தி கொண்டு செட்டித்தெருவில் ஒரு கதிரேசன்கோயிலைக்கட்டினர்; கொழும்பிலுள்ள அந்த நகரத்தார் வேலைத் தாங்கி இக்கோயிலிலிருந்து யாத்திரை செய்வது வழக்கமாக வந்துள்ளது. பிற்பட்ட காலத்தில் இந்த யாத்திரைக்குப் பங்கம் ஏற்பட்டது. இதனால் கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு முன்னர் புதுக் கோயில் நகரம் என்னும் பெயரில் ஒரு நகரம் நிறுவினர். புதுக்கதிரேசன் கோயில் என்னும் பெயர்களில், கொழும்பு செட்டியார் தெருவிலும, வெள்ளவத்தையிலும் கோயில்கள்கட்டினர்; வெள்ளவத்தையிலுள்ள கோயில் உபய கதிர்காமம் எனப்பட்டது;

செட்டியார் தெருவில் புதுக் கதிரேசன் கோயில் தோன்றியதும், ஏற்கனவே அத்தெருவில் நிறுவப்பட்ட கோயில் பழைய கதிரேசன் கோயில் எனப்பட்டது. இக்கோயில் அதிகாரிகள்பம்பலப்பிட்டியில் ஒருகோயில் நிறுவி அதற்கும் உபயகதிர்காமம் எனப் பெயரிட்டனர். ஓர் ஆண்டில் பழைய கதிரேசன கோயிலிலிருந்து வேலை எடுத்துபம்பலப்பிட்டியிலுள்ள உபய கதிர்காமத்திற்குச் சென்றால், அடுத்த ஆண்டு புதியகதிரேசன்கோயி

## மண்டூர்ப்பதி

சின்னக் கதிர்காமம் எனவும், தில்லைமண்டூர் எனவும் அழைக்கப்படும் மண்டூர்ப் பெரும்பதி மட்டக்களப்புப் பகுதியிலுள்ளசிறந்த முருகன் கோயிலாகும். இங்குள்ள பூஜை முறை கதிர்காம முறையைப் பெரிதும் ஒத்திருக்கும்; பூஜை செய்பவர் ''கற்பகனார்'' எனப்படுவார். ஒவ்வொரு கிரியையும் ஒவ்வொரு கருத்துடனும் வெவ்வேறு தவில் முழக்கத்துடனும் நடைபெறும் தவில்முழக்கத்தின் தன்மையைக் கிரகித்து மக்கள் கோயில் நிகழ்வுகளை மட்டிட்டுக் கொள்வர். இக்கோயிலின் கொடியேற்றம் சற்றுவித்தியாசமானது; கோயிற் ''கற்பகனார்'' மேள, தாளங்களுடனும் பரிவாரங்களுடனும்காட்டிற்குச் சென்று மரங்களை வெட்டி வந்து இரவு பூஜையின் போது கோயில்உட்புறத்திலும்வெளியில்நான்குபுறங்களிலும்அவற்றைக் கொடிமரங்களாக நடுவர். சுவாமி வீதி உலாவரும் போது இக்கொடி மரத்தானங்களில் நிறுத்திப் பூஜை செய்வர்;

## வெருகல் முருகன்

வெருகல் முருகன் கோயிலிலும் கதிர்காமத்தில் நடைபெறுவது போன்றே பூஜை வழிபாடுகள் நடைபெறுகின்றன. சைவப் பிராமணரே இங்கு பூஜை செய்கின்றனர். நாள் தோறும் மூன்று காலப் பூஜை நடைபெறும். ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விஷேட அபிஷேக ஆராதனை நடைபெறும். அப்போது, மேளம், குழல் ஆகிய வாத்தியங்கள் இசைக்கப்படும்; இவ் வாத்தியங்கள் விசித்திரமானவை: மேளங்கள் கஞ்சாக்கோட்டினால் அமைக்கப்பட்டுள்ளன. அதன் ஒலி ஐந்து மைல்களுக்கப்பாலும் கேட்கக் கூடியது. வெருகல் முருகன் கோயிலுக்குத் தெற்கிலும் மேற்கிலும் வெருகு நதி வளம் சேர்க்கின்றது. வெருகல் மலை, படி வெட்டி என்பனவும் இங்கு காணப்படுகின்றன. வெருகலைச் சுற்றியுள்ள சிற்றூர்களில் வாழ்பவர்கள் பெரும்பாலும் முருகனையே தம் குல தெய்வமாக வழிபடுகின்றனர். கிழக்கிலங்கையின் முக்கிய உற்சவங்களில் வெருகல் முருகன் திரு

மடையானது.

நல்லூர் ஆலய வீதியில் வாள் வீச்சும், வம்புத்தனமும் செய்தவர்கள் இந்தப் பூமியில் நிம்மதியாக வாழ்ந்ததாக வரலாறில்லை.

இதற்கு மேலாக தொண்டர்களென்று கூறிக்கொள்வோர் விடும் அட்டகாசத்தைப் பார்த்தால் நெஞ்சம் துணுக்குறும். நல்லூர் வீதியில சேவையில ஈடுபட்டுள்ள சில தொண்டர்ளையும், அவர்களின் செற்பாடுகளையும் பார்க்கும்போது கைதடிக் கிருஷாந்தி, உரும்பிராய் ரஜனி என்ற பட்டியலைத் தயாரிக்கக் காரணமாக இருந்தவர்களும் இப்படித்தான்இருந்திருப்பார்கள் போல் தெரிகிறது. அவ்வளவு காடைத்தனமுடையவர்களே தொண்டர்அமைப்பில்உள்ளனர். (இது எல்லோரையும் குறிககாது) விசுவாசமாகச் செயற்படும் ஒரு சில தொண்டர்களுமஇருக்கவேசெய்கிறார்கள். இவையெல்லாம் அளவுபொருத்தமானவர்கள் மட்டுமே அணிந்து கொள்ள வேண்டும். அளவு இல்லாதவர்கள் அடக்கமாக இருப்பதே ஆறுதலைத் தரும்.

எதுவாயினும் நல்லூர்த் திருவிழா ஒழுங்காக நடைபெறுவதை யாழ். மாநகர சபை உளப்பூர்வமாக விரும்புமாயின் உடனடியாக தொண்டர் என்ற பேரில் இருக்கும் குண்டர் படையை ஆலயச் சூழலிலிருந்து அடித்துத் துரத்த வேண்டும்.

இலங்கைக்குவந்தபோதுஇங்கு வாழ்ந்த இயக்கர், நாகர் போன்ற இனத்தவர் முந்தமிழ் மக்களின் எச்சங்களாக இருந்து சிவனையும் முருகனையும் வழிபட்டனர் என ஆராய்ச்சியாளர் கூறுவர்.

ஈழத்தில் தமிழ் மக்கள் வதியும் பல பகுதிகளில் முருகனுக்குக் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. இவற்றுள் கதிர்காமம், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், நல்லூர், மண்டூர், சித்தாண்டி, வெருகல் ஆகிய இடங்களிலுள்ளவை முக்கியமானவையாகும். இவற்றுள் கதிர்காமம் முதன்மை பெற்று விளங்குகிறது. மலை மீது வீற்றிருந்து அருள் புரியும் முருகனை "எனையாள் சற்குருவாகவும்" பெருவாழ்வைத் கூப்பி, வழிபாடியற்றுவார். இவ்வழிபாட்டு முறையை ஒருபற்றுமற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருளை வழிபடும் கந்த வழிபாடென்பர்.

### ஞானபூசை என்றும் கூறுவர்

உற்சவகாலங்களில் கர்ப்பக் கிரகத்திலிருந்து பெறப்படும் இயந்திரப் பெட்டியை யானையின் பிடரியில் வைத்து கப்புறாளைமார் தாங்கிப் பிடிக்க முக்கோண வடிவான வீதி வழியாக வலம் வரச் செய்வர். இந்த இயந்திரப் பெட்டியின் இரகசியம் சிதம்பர இரகசியம் போலக் கதிர்காம இரகசியமாகவே உள்ளது. கதிர்காமக் கந்தன் வலம் வருதல் என்பது இயந்திரப்பெட்டி

## சாயி அருளமுதம்



புத்தி சுவாதீனமற்றிருந்தும்மனநோய்வைத்திய சாலைக்குள் இல்லாது வெளியே இருக்கும் மக்கள் இவ்வுலகில் நிரம்ப உள்ளனர். ஒரு நாட்டினருக்குத் திடீரெனத் துவேஷம் மேலோங்கும்போது சாதாரண மக்கள் கூட பைத்தியம் பிடித்துக் காடவர் சாரிகளைப்போலநடக்கின்றனர் ஆனால்மனநோயாளிகளின்வைத்தியசாலையில்சில சமயம் நீங்கள் ஒரு மாதிரியான மன நோயாளியைக் காண முடியும். அவன் இடைவிடாது ஒரு மூலையில் ஆறுதலாக அமர்ந்திருந்து மற்ற நோயாளிகள் செய்யும் சேஷ்டைகளையும், கூத்துக்களையும் பார்த்துக் கொண்டிருப்பான். அவனைக் கவனிக்க வேண்டிய தேவையில்லாத காரணத்தால், வைத்தியர்களும் அவனுக்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள். அவன் ஒரு தொல்லையும் கொடுப்பதில்லை. அவனுக்கிருக்கும் பைத்தியம் மனோவியாகுலமாயிருக்கலாம். அல்லது அவன் ஒருஞானியாக இருக்கக் கூடும். கடவுள்சம்பந்தமுடைய மனிதனும் அவ்வாறே இவ்வுலகில் இருப்பான். இந்தப் பைத்திய உலகில் அவன் ஒருவனே புத்தி சுவாதீனமுள்ளவனாவான். □

நன்றி

**நாளாந்த நற்சிந்தனை.**

விலும், வெள்ளவத்தையிலும் கோயில்கள்கட்டினர்; வெள்ளவத்தையிலுள்ள கோயில் உபய கதிர்காமம் எனப்பட்டது;

செட்டியார் தெருவில் புதுக் கதிரேசன் கோயில் தோன்றியதும், ஏற்கனவே அத்தெருவில் நிறுவப்பட்ட கோயில் பழைய கதிரேசன் கோயில் எனப்பட்டது. இக்கோயில் அதிகாரிகள்பம்பலப்பிட்டியில் ஒருகோயில் நிறுவி அதற்கும் உபயகதிர்காமம் எனப் பெயரிட்டனர். ஓர் ஆண்டில் பழைய கதிரேசன கோயிலிலிருந்து வேலை எடுத்துபம்பலப்பிட்டியிலுள்ள உபய கதிர்காமத்திற்குச் சென்றால், அடுத்த ஆண்டு புதியகதிரேசன்கோயிலிலிருந்து வேலை எடுத்து வெள்ளவத்தையிலுள்ளஉபய கதிர்காமத்திற்குச்செல்லும் வழக்கம் ஏற்பட்டது. இப்படியே மாறிமாறி வேல்விழா நடைபெறும்;

கதிர்காமத்திலிருந்துசற்றுத் தொலைவிலேகதிரமலை, வள்ளிமலை என்பன இருக்கின்றன. பக்தர்கள் மாணிக்க கங்கையில் நீராடி கால் நடையாக அந்தமலைகளில் ஏறி மலைகளின்உச்சியிலுள்ள முருகனையும் வள்ளியையும் வழிபடுவர்; இவற்றைவிட அடியார்கள் இளைப்பாறவும் பசி ஆறவும், தாகம்தீர்க்கவும் பலமடங்கள் இருக்கின்றன. இராமகிருஷ்ண சங்கத்தார் அடியார்களின் வசதிக்காகப் பிரமாண்டமான மடமொன்றை 50 ஆண்டுகளுக்கு முன்னர் அமைத்தனர். புனித நகரம் என்ற போர்வையில் அந்தமடத்தின் செயற்பாடுகள் தடுத்துநிறுத்தப்பட்டமை இந்துமதத்தவரின் நெஞ்சங்களில் ஆறாத வடுவை ஏற்படுத்தியுள்ளது. இதுபோன்ற பக்கச் சார்பான நடவடிக்கைகளால் கதிர்காமக் கந்தனின் திருத்தலம் இன்று களியாட்டக் களமாக மாறியுள்ளது; வைதாரையும் வாழவைக்கும் கந்தன் மெய்யான தனது வெளிப்பாட்டைக் காட்டும் நாள் வெகு தூரத்தில் இல்லை எனலாம்.

மேளம், குழல் ஆகிய வாத்தியங்கள் இசைக்கப்படும்; இவ்வாத்தியங்கள் விசித்திரமானவை: மேளங்கள் கஞ்சாக் கோட்டினால் அமைக்கப்பட்டுள்ளன. அதன் ஒலி ஐந்து மைல்களுக்கப்பாலும் கேட்கக் கூடியது. வெருகல் முருகன் கோயிலுக்குத் தெற்கிலும் மேற்கிலும் வெருகு நதி வளம் சேர்க்கின்றது. வெருகல் மலை, படி வெட்டி என்பனவும் இங்கு காணப்படுகின்றன. வெருகலைச் சுற்றியுள்ள சிற்றூர்களில் வாழ்பவர்கள் பெரும்பாலும் முருகனையே தம் குல தெய்வமாக வழிபடுகின்றனர். கிழக்கிலங்கையின் முக்கிய உற்சவங்களில் வெருகல் முருகன் திருவிழா உற்சவமும் ஒன்றாகும்.

### சித்தாண்டி

சித்தாண்டிச் சித்திரவேலாயுத சுவாமி கோயில் சிகண்டி முனிவரால் அமைக்கப்பட்டதால், சிகண்டி என்ற பெயர் மருவிச் சித்தாண்டிச் சித்திர வேலாயுத சுவாமி கோயிலாயிற்று என்பர்: இதன் முகப்பில் பிரமாண்டமான கோபுரம் உண்டு. இக் கோயிலை "வன்னிம்மை வண்ணாக்கர்" பரம்பரையினர் பரிபாலிக்கின்றனர். மூலஸ்தானத்தில் வேலை வைத்து வழிபடுகிறார்கள்: ஆகம முறைப்படி அந்தணர்கள் மூன்று காலப் பூஜைகள் செய்கின்றனர். புராதன காலம் முதல் முருக வழிபாடு கிழக்கிலங்கையில் நிலவி வந்துள்ளது. திருகோணமலைப் பிரதேசத்திலும் அது செல்வாக்குப் பெற்றிருந்ததை "மகாவம்சம்" கட்டுகிறது.

### செல்வச்சந்நிதி

செல்வச்சந்நிதி தொண்டைமானாற்றிலுள்ளது. இக் கோயிலிலும் கதிர்காமம் போலவே வழிபாடுகள் நடைபெறும். இங்கும் பிராமணர்கள் பூஜை செய்வதில்லை. சாதி வேறுபாடின்றி மக்கள் இங்கு வழிபாடியற்றுவர்; காவடியாட்டம் இங்கு சிறப்பாக நடை பெறும். துலாக்

[6ஆம் பக்கம் பார்க்க)

### மருதானை பாலியல் சம்பவம்

# மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

மருதானை சோதனைச் சாவடியில்இடம்பெற்ற இளம் பெண்மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவம் தொடர்பாக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் பிரதிவாதிகளாக இரண்டுபொலிசாரும் ஓர் இராணுவமும் குறிப்பிடப்பட்டுள்ளது:

கடந்த யூன் மாதம் 23ம் திகதி விடுதியொன்றில் இருந்துவீடுதிரும்பிய இரண்டு பிள்ளைகளின் தாயானஇளம் பெண் மீது மருதானைச் சோதனைச் சாவடியில் வைத்து துன்புறுத்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### தகுதிகாண் ஆசிரியர் ஆட்சேர்ப்பு

# நேர்முகத் தேர்வுக்கு 258பேர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண தமிழ்மொழிமூல அரசாங்க பாடசாலைகளிலுள்ளஆசிரிய வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு தகுதிகாண் ஆசிரியர்கள் ஆட்சேர்ப்புத் தொடர்பான நேர்முகத் தேர்வு இம்மாதம் இடம் பெறவுள்ளது.

மேற்படி நேர்முகத் தேர்விற்கு வலிகாம வலயத்தில் இருந்து 108பேரும் தீவகவலயத்தில் இருந்து 111 பேரும் வடமராட்சி வலயத்தில் இருந்து 84 பேரும் யாழ்வலயத்தில் இருந்து 76பேரும், தென்மராட்சி வலயத்தில் இருந்து 69பேரும் அழைக்கப் பட்டுள்ளனர்.

யாழ்வலயத்திற்கான நேர்முகத்தேர்வு இம்மாதம் 22ம் திகதி காலை 9.30 மணிக்கு இடம்பெறுமெனவும்,

நேர்வுநாடி, தேசிய அடையாளஅட்டை, பிறப்புச்சான்றிதழ், விண்ணப்பித்தபிரதேசசெயலர்பிரிவில் நிரந்தரவதிவினை உறுதிசெய்வதற்கான பிரதேச செயலரினால்மேலொப்பமிடப்பட்ட கிராம சேவையாளரின் வதிவிடச் சான்றிதழ், 1997,98,99வருடங்களுக்குரிய வாக்காளர் இடாப்பின் பிரித்தெடுப்பிதழ்கள், பாடசாலை விடுகைப் பத்திரம், கல்விச் சான்றிதழ்கள், அரசாங்க அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலையொன்றில் தொண்டர் ஆசிரியராககற்பித்த அனுபவம் இருப்பின் அதனை அதிபரும் கல்விப் பணிப்பாளரும் உறுதிப்படுத்திய கடிதம்வேறு பொருத்தமான சான்றிதழ்கள் என்பனவற்றுடன் சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

மேற்படிநேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர்விபரங்களை அந்தந்த வலயக் கல்விப் பணிமனைகளில் பார்வையிடலாம்.

யாழ்வலயத்தில் இருந்து நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் யாழ்வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. (உ-10)

---

**மட்டு**

அங்கிருந்து தப்பி வந்த ஏனைய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் மீன்பிடிக்க மற்றும் விறகு சேகரிக்கச் செல்பவர்கள் காணாமல் போவதும், பின்னர் சடலமாக காணப்படுவதும் வழமையான நிகழ்வுகளாக அமைந்திருப்பதனால் மேற்படி மீனவர்கள் காணாமல் போன சம்பவம் அங்கு பெரும் அச்சத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை இம்மீனவர்கள் தொடர்பான தகவல்களை பெற மீனவர்களின் உறவினர்கள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்ஜோசெப் பரராஜசிங்கத்திடம் முறையிட்டுள்ளனர். (இ)

---

**ஈழத்தமிழ்.**

நீதிமன்றின் இந்த அறிவிப்பை ஜேர்மன் மத்திய மாநில அரசுகளும் ஏனைய நிர்வாக நீதிமன்றங்களும் ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான நடவடிக்கைகளை ஜேர்மனியின் உள்ள சட்ட ஆலோசகரும் அரசதமிழ்மொழி பெயர்ப்பாளருமான எம். ரி. எஸ் இராமசந்திரன் நடவடிக்கை எடுத்துள்ளார். (வ)

---

**ஜப்பானி ---**

கலந்து கொண்டனர்.

தற்போதைய அரசியல்ஸ்திரமற்றநிலை பாராளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்திவைத்துள்ளதால் அரசியற்கட்சிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள நம்பிக்கையின்மை பற்றி இருதரப்பும் விரிவாக கலந்துரையாடின.

அத்துடன் தமது கட்சி பொதுஜனஐக்கிய முன்னணியுடன் செய்துகொண்டுள்ள நன்நடத்தை அரசபற்றியும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டது. (இ)

---

**மிதிவெடி**

(வயது 35)என்பவரே தனது இடதுகாலை இழந்தநிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ந-8-10)

---

**அமைச்சர்**

எதிர்கொண்டிருக்கும் இலங்கையரசு அமைச்சர் ஜெயராஜ்பெர்ணாண்டோபுள்ளேயின் இந்த அறிவித்தலின் மூலம் முற்றிலும் போயுள்ள சமாதான முயற்சிகள் குறித்து ஓர் மாயைத் தோற்றத்தை ஏற்படுத்த அரசு முனைந்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் சென்ற நோர்வேத்தூதுவர் எரிக்சொல்ஹெய்மின் சமாதான முயற்சிகளை அரசு நிராகரித்த பின்னர் விடுதலைப்புலிகள் இலங்கையரசுடன் எந்தப் பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவில்லை என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளேயின்அறிக்கையை மறுத்திருக்கும் அன்ரன் பாலசிங்கத்தின் கூற்று விடுதலைப்புலிகளின் குரலாக உள்ளதெனவும், விடுதலைப் புலிகள் எச்சந்தர்ப்பத்திலும் கைவிடாத தனிநாட்டுக் கோரிக்கைக்கு மாறாக அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளேயின் கூற்று அமைந்திருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ)

---

### கட்டுநாயக்கா விமானத்தளத்தை

# புலிகள் தாக்கியபோது 2864பேர் பாதுகாப்புக் கடமையில் இருந்தனர்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம், மற்றும்விமான நிலையத் தாக்குதல்கள் நடைபெற்ற போதுஅங்கு 2864பேர்பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்ததாகத் தெரியவந்துள்ளது.

விடுதலைப்புலிகள் தாக்குதல்களை மேற்கொண்ட சமயம்169விமானப்படை அதிகாரிகளும், 2695விமான படை வீரர்களும் இருந்ததாகவும் இவர்களில்தரைத் தாக்குதலில் பயிற்சிபெற்ற 400பேரும் அந்த கடமையில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

---

### பொ.ஐ முன்னணியின்

# பாராளுமன்ற குழுக் கூட்டம் நாளை

[கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்றக்குழுக் கூட்டம் ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்க தலைமையில் நாளை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் ஜே.வி.பி தெரிவித்துள்ள தகுதி காண் அரசுபற்றிய விடயம்ஆராயப்படவுள்ளது.

இதேவேளை பொதுஜன ஐக்கியமுன்னணியின் அமைச்சரவைக் கூட்டம் இன்றுஜனாதிபதி தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்திலும்ஜே வி.பியின் தகுதிகாண் அரசு பற்றிய விடயம் ஆராயப்படவுள்ளது [இ]

### 1000 மெ. தொன் அரிசி யாழ் வரும்

[வவுனியா]

இராணுவகட்டுப்பாடற்ற வன்னிப பகுதியில் இருந்து யாழ் மாவட்டத்திற்கு ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி அனுப்படவுள்ளதாக வவுனியர மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் தெரிவித்துள்ளார். (ந-4)

---

**அமைச்சர்கள் ----**

திஸநாயக்கா' மகிந்தவிஜயசேகர ஆகியோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள ஜனாதிபதி முடிவு செய்துள்ளார்.

இதேவேளை அரசுக்கு எதிராக செயற்படும் அமைச்சர்கள் மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும அமைச்சர்கள் ஜனாதிபதியை வலியுறுத்தி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

---

**மடுமாதா...**

ஆயர் திருப்பலி பூசையில் தெரிவித்துள்ளார்.

இம்முறை நடைபெற்ற மடுமாதா உற்சவத்திற்குச் செல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்கப்பெற்றமையினால் நாட்டின்பல பாகங்களில் இருந்து பக்தர்கள் பெருமளவு கூடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

---

**ஜோன்**

தித்தலைவர் கருஜெயசூரியா, டிரோன் பெர்ணான்டோ, டபிள்யு.ஜே.எம் லொக்கு பண்டார, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம், அகிலஇலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் அ. விநாயகமூர்த்தி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவன்ச, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், சிஹல உறுமய எம்.பி சம்பக்கரணவக்க, ஆகியோர் கலந்து கொண்டனர். (வ)

---

# விமானத் தாக்குதலை உடன்நிறுத்த வேண்டும்

### ஜனாதிபதிக்கு செல்லச்சாமி கடிதம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் தாக்கி அழிக்கப்பட்டமைக்கு பழிவாங்கும் நடவடிக்கையாக வடபகுதியில் விமானப்படையினர் மேற்கொள்ளும் விமானக் குண்டுத்தாக்குதலை உடனடியாக நிறுத்தவேண்டுமென்று தேசியதொழிலாளர் காங்கிரஸ்தலைவர்எம். எஸ் செல்லச்சாமி ஜனாதிபதியைக் கடிதமூலம் கோரியுள்ளார்.

வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் விமானத் தாக்குதல்கள்குறித்துஜனாதிபதி சந்திரிகாவுக்கு எம்.எஸ் செல்லச்சாமி அனுப்பிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

பழிவாங்கும் விமானத் தாக்குதல்களை அரசாங்கம் உடனடியாக நிறுத்திவிட்டு விடுதலைப்புலிகளோடு பேசி இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கம் முன்வரவேண்டும்.

விமானப் படைத்தளத் தாக்குதலையடுத்து இந்தியாவுக்கான விமானக்கட்டணம் அதிகரித்துள்ளது. இதனால் இந்தியாசெல்லும் விமானப் பயணிகள் பெரும்சிரமமடைகின்றனர். இதனைக்குறைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# பிரதி அமைச்சர்கள் கூடி ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

[கொழும்பு]

தற்போதுள்ள நெருக்கடியான அரசியல் சூழ்நிலையில் அரசாங்கத்தை கொண்டு நடத்துவதற்குரிய வழிவகைகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதியை கோருவதென்ற தீர்மானத்தை நேற்று பாராளுமன்றக் கட்டடத்தில் கூடிய பிரதியமைச்சர்கள் முடிவு செய்துள்ளனர்.

தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து ஆராய பிரதியமைச்சர்கள் நேற்று மாலை பாராளுமன்றக் கட்டிடத்தில் ஒன்று கூடினர்.

இவ் ஒன்றுகூடலின் போதே பிரதியமைச்சர்கள் மேற்கண்டவாறு ஜனாதிபதியை கோரும் தீர்மானத்தை எடுத்தனர்.

அக்கூட்டத்தில். நாட்டில் அரசியல் நெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் இந்நிலையில். ஜனாதிபதி அரசாங்கத்தை கொண்டு நடாத்துவதற்குரிய வழிவகைகளை ஆராய வேண்டுமென்பதை பிரதியமைச்சர் கோருவதென்றும். அவ்விடயம் குறித்து சிலதினங்களில் ஜனாதிபதியை நேரடியாக சந்தித்து வலியுறுத்துவதென்றும் முடிபு செய்யப்பட்டது. (இ]

---

# நூலகம் இயங்க படையினர்தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு துறைநிலாவணைப்பகுதியில் இயங்கும் நூலகம்ஒன்றை படையினர் இயங்க தடை விதித்துள்ளனர்.

கடந்ததிங்கட்கிழமை காரைதீவுபகுதியில் முகாமிட்டுள்ள விசேடஅதிரடிபடையினர் எவ்வித முன்னறிவித்தலுமின்றி இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் தற்போதுபொது நூலகம் இயங்கமுடியாதிருப்பதாகவும் அதனைவேறிடத்திற்கு மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் களுவாஞ்சிகுடி பிரதேசசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ந-4)

---

**மடுயாத்திரிகர் ..**

நாடகக் கலைஞர்களை இன்முகத்துடன் வரவேற்ற சிங்களமக்கள், தாம் எடுத்துச் சென்ற இனிப்புப்பண்டங்களை அவர்களுக்கு வழங்கி, தமது மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது சிங்கள மக்கள் விடுதலைப் போராட்டம் பற்றி அறிந்து கொள்ள ''மீண்டும் ஒரு வெள்ளை புறா'' என்னும் நாடகம் காண்பிக்கப்பட்டதுடன், போராட்டம்தொடர்பான ஒளிப்படங்களும் அவர்களுக்கு காட்டப்பட்டன. [இ]

---

### பண்ணையாளர்கள்

# பாதிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலைய தாக்குதலை அடுத்து வெளிநாட்டுஉல்லாசப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்ததனால் கோழிப்பண்ணையாளர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக கோழிப்பண்ணையாளர் சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.

கோழி இறைச்சிகளையும் முட்டைகளையும் நிர்ணயித்த விலைக்கு குறைவாக வேனும் விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். [ந-5[

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் 'பெண்கள் உரிமைகளைப்பாதுகாப்பதில் சட்டத்தின் பங்கு' என்ற தலைப்பிலான கருத்தரங்கின் இரண்டாவது தொடர் நாளைநீர்வேலி கணேசாமுன்பள்ளியில்நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பெண்களின் சட்ட உரிமைகள், பெண்களின் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் சட்டத்தின் முன்பெண்கள் என்றவிடயங்கள் தொடர்பாக சட்டத்தரணிகள் திருமதி பவானி சற்குணராஜா, திருமதி லிங்காதுரைராஜா ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ந-8)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள
அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.